கொரோனா நிவாரணப் பணியில் செங்குந்தர்கள்

2020-23 செயற்குழு உறுப்பினர்கள் புகைப்படம் மற்றும் முகவரிப் பட்டியல்

மலர்:20 இதழ்: 4
ஏப்ரல் – 2020
Date of Publication
25th day of Every month
தனிப்பிரதி விலை : ₹ 15/–

செங்குந்த மித்திரன்

தூய தமிழ்க் காவலர்
திரு. கு.மு.அண்ணல் தங்கோ

வாழ்க வாழ்க
செங்குந்தர்!

வெல்க வெல்க
செங்குந்தம்!

கொடைக்கானல் பூம்பாறை அருள்மிகு குழந்தை முருகன்

செங்குந்தர் உறுதிமொழி

நாம் செங்குந்த குலக்கடவுள் அருள்மிகு முருகப்பெருமான் ஆணையாக, மனசாட்சியுடன் கீழ்க்கண்டவாறு உறுதி பூணுகிறோம்.

1. நாம் இந்தியக் குடிமக்களாய் இருப்பதை, பெருமையாகக் கருதுகிறோம். நமது நாட்டின் அரசியல் அமைப்புச் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, நாட்டின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவோம்.

2. நாம், செங்குந்தர் என்ற உணர்வுடன் ஒன்றுபட்டு, நமது சங்கத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு சமூக, பொருளாதார, கல்வி, தொழில், கலாச்சார முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம். சமூக நலம் காப்போம்.

3. நாம் மற்ற இனத்தவரிடம், மனித நேயம் கொண்டு, நட்புடனும், அன்புடனும் பழகுவோம்.

4. நாம், நமது உரிமைகளைப் பாதுகாக்க எப்பொழுதும் விழிப்புடன் செயல்படுவோம்.

5. நாம் நமது சங்கம் நிறுவிய சான்றோர்களை நினைவில் கொண்டு, சங்கத்தை நாளும் வளர்த்திடுவோம்.

தலைவர் மடல்

ஒழுங்காக, நேர்மையாக, ஆத்மார்த்தமாக, மக்களுக்காக மானம் காக்கும் ஆடைத் தொழிலைச் சிறப்பாகச் செய்து கொண்டுவரும் செங்குந்த சமுதாயத்திற்கு வணக்கம்.

நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தனது குடும்பத்தை ஒழுக்கமுள்ள குடும்பமாக மாற்றிவிட்டால், சமுதாய சிந்தனையும் பண்பாடும் நிறைந்த உயர்வான நாடாகிவிடும்.

தற்பொழுது உலகெங்கும் ‘கொரோனா’ வைரஸ் பரவி எல்லோரையும் வீட்டுச் சிறையில் வைத்துள்ளதைப் பார்க்கின்றபொழுது, எல்லாவற்றிலும் ஒழுக்கம், சுத்தம், சுகாதாரம், வாழ்க்கையில் ஒரு நெறிமுறையை கடைப்பிடிக்கவேண்டும் என்ற தத்துவத்தை நீண்ட காலத்திற்கு பிறகு இயற்கை நமக்கு உணர்த்தியுள்ளது.

இது சரியான தருணம். மக்களும், சமுதாயமும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் வருவதற்கு நமக்குக் கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பு. இதைப் பயன்படுத்தி சிறந்த தூய்மையான வாழ்க்கையின் புதிய பகுதிக்கு செல்வோமாக.

வந்துவிட்ட வியாதியைவிட
வந்துவிடுமோ என்று எண்ணி
பயப்படுகிற வியாதியே
கீழே தள்ளி வீழ்த்திவிடும்.

பலப்படுவோம் எண்ணங்களால் செயல்படுவோம்
நம்பிக்கைகளால் உடல் அளவில் பலவீனப்பட்டாலும்
மனதளவில் மிருக பலத்தோடு இருப்போம்!
இடர்களை எதிர்கொள்வோம்! திறமையாக,
பொறுமையாக இருந்து வென்றிடுவோம்!
நலம் பெறுவோம்,
நலமுடன் வாழ்ந்திடுவோம்!!

அன்புடன்

KPK

சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி

கொரோனா அரக்கனை ஒழிக்க வரும்

முருகன் கை வேல்

திருப்பூர் மாவட்டம் காங்கயம் வட்டத்தில் திருப்பூர் சாலையில் காங்கயத்திலிருந்து 4 கி.மீ தொலைவில் சிவன்மலை உள்ளது. புகழ்பெற்ற ஆலயம் சிவன்மலை சுப்ரமணிய சுவாமி கோவில்.

காங்கய நாட்டுக்கு பொது மலையாக உள்ளது. காங்கய நாட்டுப் பதினான்கு ஊர்ப் பொதுமக்களும் வழிபட்டதாகவும் திருப்பணிகள் செய்ததாகவும் குடமுழுக்கு விழா நடத்தியதாகவும் இலக்கியங்களும் தனிப்பாடல்களும் வரலாற்று ஆவணங்களும் கூறுகிறது.

சிறப்புகள்

சைதன்ய சொரூபமாக இன்றும் சிவவாக்கிய சித்தர் இங்கு வாழ்ந்து வருவதாகவும், உட்பிரகாரத்தில் குகையில் சிவவாக்கியர் அமர்ந்த நிலையில், வள்ளியோடு சுப்ரமணியர் அருளும் காட்சி உள்ளது.

அணையாத தீபம் எரிந்து கொண்டுள்ளது சிறப்பாகும். திருநள்ளாறு சென்று சனீஸ்வரனை தரிசிப்பதும், சூரிய நாராயணர் கோயில் சென்று சூரியனை வழிபடுவதால் சிறப்பும் இங்கு கிடைக்கும்.

கொங்கு நாட்டுக் குன்றுதோறாடல் தலங்களில் சிறந்தது சிவன்மலை சமயப் பெருமையும், இலக்கியச் சிறப்பும், புராணப் புகழும்

உடையது சிவன்மலை, சிறு மலையாக இருந்தாலும் சிறப்புமிக்கது.

வரலாற்று முற்பட்ட காலத்திலிருந்தே சிவன்மலைப் பகுதியில் மக்கள் வாழ்ந்துள்ளனர் படியூர் சர்வோதய சங்கம் அமைந்துள்ள இடத்தின் பின்புறம் தொல்பழங்காலப் பெருங்கற்படைச் சின்னம் காணப்படுகிறது. இதன் மூலம் சிவன்மலையின் தொன்மை வெளிப்படுகிறது.

'பட்டாலி நகர்ச் சிவன்மலை' 'சிவன்மலைக் பட்டாலியாரை என்றே குறிப்புக்கள் வருகின்றன. சிவன் மலைச் சுப்பிரமணியரை பட்டாலி பால்வெண்ணீசுவரர் பாலன் என்று அழைப்பதே வழக்கமாகும.

அதன் பின் அங்கு வந்து சித்தர் சிவ வாக்கியர் முன்நின்று சான்றோர்களின் பெருந்துணையுடன் பக்தர்களின் ஒத்துழைப்பால் பல திருப்பணிகள் மேற்கொண்டதால் இந்த மலை சிவன் மலை என்று பெயர் பெற்றதாக கூறப்படுகிறது. அகத்தியர் சிவனை நோக்கித் தவம் செய்த தலம் என்பதால் சிவன் மலை என்றானது என்றும்,

இந்த மலையைச் சுற்றி பசுக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. இதனால் சிவனின் சேயான (பசு) குகன் வந்து அமர்ந்து அருள்பாலிப்பதால் சேமலை என்று அழைக்கப்பட்டு, காலப்போக்கில் அது சிவன்மலை என மருவியதாகவும் பெயர்க்காரணம் கூறப்படுகிறது.

மற்ற கோவில்களில் எல்லாம் முருகனுக்கு உகந்த நாட்களான வைகாசி விசாகம், சஷ்டி விரதம், தைப்பூசம், பங்குனி உத்திரம் ஆகிய நாட்களில் திருவிழாக்கள் நடைபெறுவது வழக்கமாகும். இதன் காரணமாகவே அந்த கோவில்கள் அனைத்தும் புகழ்பெற்ற கோவில் களாக உள்ளன. ஆனால் சிவன்மலை சுப்ரமணிய சுவாமி கோவில் இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டு புகழ்பெற்ற கோவிலாக உள்ளது.

தலவரலாறு

வள்ளிமலைக்குச் சென்று வள்ளியை மணம்முடித்த முருகன் வள்ளியுடன் இங்கு திரும்பி வந்து குடிகொண்டதாகவும் தல வரலாறு கூறுகிறது. அதனால்தான் இத்தலத் தில் முருகன், சுப்பிரமணியராக வள்ளியுடன் காட்சி தருகிறார். மற்ற திருத்தலங்கள் போலன்றி இங்கு முதல் வழிபாடு முருகப் பெருமானுக்கே. அதன் பிறகு பிள்ளையாரை வழிபடுகிறனர்.

சிவன் மலை ஆண்டவர் உத்தரவு

சிவன் மலை ஆண்டவர் கோவிலில் உள்ள உத்தரவுப் பெட்டி

தான் சிறப்புக்கு காரணம். சிவன்மலை சுப்ரமணிய சுவாமி கோவிலில் உள்ள ஆண்டவர் உத்தரவுப் பெட்டியில் வைக்கப்படும் பொருளைப் பொருத்து தமிழ்நாட்டிலும், இந்திய அளவிலும் அதன் தாக்கம் இருக்கும் என்பது இன்று வரை நிரூபிக்கப்பட்டு வருகிறது.

இப்பெட்டியில் வைக்கப்படும் பொருளானது, தமிழ்நாட்டிலுள்ள ஏதாவது ஒரு ஊரிலுள்ள பக்தர் ஒருவரின் கனவில் முருகன் அருளாசியால் தோன்றும் பொருள் வைக்கப்படும்.

இதில் இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால், அந்த பக்தருக்கு, இப்படி ஒரு கோவில் உள்ளது என்பதே தெரியாது. அப்படிப்பட்டவரின் கனவில் வரும் பொருள்தான் ஆண்டவர் உத்தரவுப் பெட்டியில் வைக்கப்படும். மேலும் அந்தக் கனவு உண்மைதானா என்பதை இக்கோவிலில் பூ போட்டு பார்த்த பின்பே, கனவில் தோன்றிய பொருள் ஆண்டவர் உத்தரவுப் பெட்டியில் வைத்து தினந்தோறும் பூஜிக்கப்பட்டு வரும்.

அடுத்து யாராவது ஒரு பக்தரின் கனவில் வேறு ஒரு பொருள் வந்து, அது உத்தரவுப் பெட்டியில் வைக்கப்படும் வரையிலும், முந்தைய பொருளே பூஜிக்கப்பட்டு வரும். இதற்கு கால வரம்பு எதுவும் கிடையாது.

இதுவரை, பக்தர்களின் கனவில் மண், துப்பாக்கி, மஞ்சள், இளநீர், தங்கம், சர்க்கரை. கணக்கு நோட்டு, பூமாலை, மகாலட்சுமி சிலை, மஞ்சள் தாலி என நூற்றுக்கும் மேற்பட்ட பொருட்கள் ஆண்டவர் உத்தரவுப் பெட்டியில் வைக்கப்பட்டு பூஜிக்கப் பட்டுள்ளன.

இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம், கோவை மாவட்டத்தை சேர்ந்த பக்தர் ஒருவரின் கனவில் மஞ்சள் தாலிக்கயிறு உத்தரவு வந்துள்ளது. இதையடுத்து ஆண்டவர் உத்தரவுப்

பெட்டியில் மஞ்சள் தாலிக்கயிறு வைத்து பூஜிக்கப்பட்டு வருகிறது. இதனால், இந்த ஆண்டு ஏகப்பட்ட சுபகாரியங்கள் நடைபெறும் என்றே அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால், யாருமே எதிர்பார்க்காத வகையில், சீனாவில் உருவான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி, இன்று வரையில் சுமார் 22 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களை தாக்கி, சுமார் ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்டவர்களை பலி வாங்கிவிட்டது.

கொரோனா நோய் எதிர்ப்பு சக்தி

இந்தியாவிலும் சுமார் இருபத்து ஐந்தாயிரத்திற்கும் மேலானவர்கள் கொரோனா வைரஸின் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர். இதுவரை 1000க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இதை உணர்த்தவே ஆண்டவர் உத்தரவுப் பெட்டியில் மஞ்சளுடன் தாலிக்கயிறு வந்ததாக தற்போது பக்தர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.

வெள்ளி வேல்

அதே சமயம், கொரோனா வைரஸின் தாக்குதலில் இருந்து தப்பிக்க நிச்சயம் அருள்புரிவான் என்று பக்தர்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். இந்நிலையில், நெல்லை மாவட்டத்தை சேர்ந்த 50 வயது பக்தர் ஒருவரின் கனவில் முருகன் தோன்றி, ஆண்டவர் உத்தரவுப் பெட்டியில் வேல் வைத்து வழிபட்டு வருமாறு உத்தரவிட்டுள்ளார். அந்த பக்தரின் கனவு குறித்து கோவிலில் பூ போட்டு பிரசங்கம் பார்த்த போது, வேல் வைத்து வழிபட உத்தரவு கிடைத்துள்ளது. இதனையடுத்து தற்போது, வெள்ளியில் ஒரு வேல் செய்யப்பட்டு ஆண்டவர் உத்தரவு பெட்டியில் வைத்து வழிபட்டு வருகின்றனர்.

பக்தர்கள் கனவில் முருகன் தனக்கு வந்த கனவு பற்றி அந்த பக்தர் கூறியபோது, நான் இதுவரை ஒரு முறை கூட சிவன்மலை கோவிலுக்கு சென்றதில்லை. என்னுடைய கனவில் வந்து ஆண்டவர் உத்தரவு பிறப்பித்தது. எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த கருணைக் கடலான அந்த முருகப் பெருமானின் கருணைப் பார்வை எனக்கு கிடைத்துள்ளது என்று பக்தியுடன் கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் அழியுமா

வேல் என்பது முருகப் பெருமானின் கையில் உள்ள ஆயுதம். இது அசுரர்களை அழிப்பதற்காக அன்னை பார்வதி தேவி தன்னுடைய முழு சக்தியையும் ஒரு வேலில் அடக்கி, அதை முருகப் பெருமானுக்கு வழங்கியதாக புராணங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது உலகமெங்கும் பரவி அச்சத்தை ஏற்படுத்திவரும் கொரோனாவை ஒழிக்க, விரைவில் நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்பதை உணர்த்தவே, ஆண்டவர் உத்தரவுப் பெட்டியில் வேல் வைத்து பூஜிக்கப்படுவருவதாக பக்தர்கள் நம்புகின்றனர்.

வழித்தடம்

திருப்பூரிலிருந்து 24 கி.மீ தூரத்திலும், கோயம்புத்தூரில் இருந்து பல்லடம் வழியாக 85 கி.மீ. ஈரோட்டிலிருந்து அரச்சலூர் வழியாக 45 கி.மீ. தூரமும் பயணித்து வரலாம். அடிவாரத்திலிருந்து மலைக் கோயிலுக்கு வாகனங்களில் செல்ல ரோடு வசதி உள்ளது

சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அலுவலக தொலைபேசி எண்: 04257 - 220680, மலைக்கோயில் எண் : 04257 - 220630.

திங்கள் ஒரு திருக்குறள்

மருந்து
(நோய் தடுக்கும் உணவு முறையும் மருத்துவ முறையும்)

950

உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்என்று
அப்பால்நாற் கூற்றே மருந்து.

நோயாளி, நோய் தீர்க்கும் மருத்துவன், உரிய மருந்து, மருந்தை நோயாளிக்கு முறையாகக் கொடுப்பான், என நான்கு பகுதிகளை மருத்துவமுறை கொண்டுள்ளது.

கருத்தோவியம்: சிவன்மலை பித்தன் **நடராசன்**

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் கருங்குழி பேரூராட்சியில் உள்ள செங்குந்த மகாஜன சங்கம் மேலவலம் கிளை சார்பாக மேலவலம், மேலவலம்பேட்டை பள்ளப்பேட்டை மற்றும் மலாளிப்பேட்டை ஆகிய பகுதிகளில் உள்ள செங்குந்த உறவினர்களுக்கு சங்கத் தலைவர் K.நடராசன் அவர்கள் ஊரடங்கை முன்னிட்டு தமிழ் புத்தாண்டை சிறப்பாக கொண்டாட நிவாரணத் தொகை ரூபாய் ஆயிரம் வழங்கினார்கள். உடன் செயலாளர் சோமசுந்தரம் பொருளாளர் T.பன்னீர்செல்வம் மற்றும் முன்னாள் தலைமைச் சங்க செயற்குழு உறுப்பினர் வ. இராமதாஸ் மற்றும் கிளைச்சங்க செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சின்னசேலம் பேரூராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு சங்கத்தின் சார்பில் உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

தொடக்கம். 1927 பதிவு எண்: 9/1938

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

58/89, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 600 001.

044 - 48653014, 25241431

K.P.K. செல்வராஜ்
தலைவர்

R.P. குமரகுருபரன்
பொதுச் செயலாளர்

R. காந்தி
பொருளாளர்

மனிதநேயத்துக்கு நன்றி!

கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக்காக மைய மாநில அரசுகள் அறிவித்துள்ள ஊரடங்கு சட்டத்தின்படி, இல்லங்களிலேயே இருந்து இன்னலுற்று வரும் ஆயிரக்கணக்கான சமுதாய சொந்தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து வேதனையில் வாழ்ந்து வருகின்றனர்.

ஆயினும், நமது சமுதாய சான்றோர்கள் அனைத்து மாவட்டங்களிலும், கொரோனா தடுப்பு நிவாரண உதவிகளாக அரிசி, மளிகைப் பொருட்கள், பழங்கள், போர்வைகள் எனப் பலவிதமான பொருட்களை ஏழை, எளியவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து வருகிறார்கள்.

அவர்கள் அனைவருக்கும் தனித்தனியாக நன்றி கூற முடியவில்லை என்றாலும், அனைத்து மாவட்ட நிர்வாகிகளுக்கும், கிளைச் சங்க நிர்வாகிகளிக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியை கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஊரடங்கு காலம் இன்னமும் தொடரக்கூடும் என்பதால், சற்று வசதி, வாய்ப்புள்ள மாவட்டங்கள், மற்ற மாவட்டங்களுக்கு உதவுவதற்கு முன்வரவேண்டும். தொடர்ந்து எல்லோரும் தங்களால் முடிந்த அளவு உதவிபுரிய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, செங்குந்த உறவுகளின் இந்த மனிதாபிமான செயலுக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சிரம் தாழ்த்தி வாழ்த்துகிறது.

இப்படிக்கு

தலைவர் மற்றும் நிர்வாகிகள்
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

நம்ம வீட்டுக் கல்யாணம்

09-04-2020 வியாழக்கிழமை அன்று ஆண்டிமடத்தில் நடைபெற்ற அரியலூர் மாவட்ட செ.ம.சங்கத்தின் முன்னாள் தலைவர்
திரு. V.A.R. பழனியப்பன் செங்குந்தர் - திருமதி.சுமதி பழனியப்பன்
ஆகியோரது மகன் **P. அருண்குமார்** B.E.,– **G.C. அபிநயா** B.E.,
ஆகியோரது திருமணத்திற்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ராணிப்பேட்டை மாவட்டம் செங்குந்த மகாஜன சங்கம் தலைவர் A.சுப்பரமணியம் அவர்களும், மாநில செயற்குழு உறுப்பினர் N.V.ஜீவரத்தினம் மற்றும் பனப்பாக்கம் கிளை செங்குந்தர் உறுப்பினரும் தொண்டுள்ளம் கொண்ட நண்பர்களும் சேர்ந்து மிகவும் நலிவடைந்த 150 நபர்களுக்கு அரிசி மளிகை சாமன்கள் மற்றும் காய்கறிகள் ரூ. 75000 மதிப்பில் வழங்கப்பட்டது

நெசவாளர் துயர்துடைக்க வேண்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தலைமைச் சங்கம் 30-03-2020 அன்று அனுப்பிய கடித நகல்

Estd. 1927 Regd. No. 9/1938

SOUTH INDIAN SENGUNTHA MAHAJANA SANGAM

58/89, Armenian Street, Chennai - 600 001.
044 - 48653014, 25241431

K.P.K. Selvaraj, President | R.P. Kumarakurubaran, Secretary | R. Gandhi, Treasurer

தேதி: 30-03-2020

பெறுநர்: **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்,**
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.
தமிழ்நாடு.

ஐயா,

பொருள்: நெசவாளர்கள் வேலைவாய்ப்பும், வருமானமும் இன்றி தவித்தல் - நிவாரண உதவிகள் கோருதல் தொடர்பாக.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு,

வணக்கம்.

கொரோனா வைரஸ் தொற்றின் கோரப்பிடியிலிருந்து தமிழகத்தைக் காக்க, அல்லும் பகலும் இடையறாது பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு, மருத்துவ வசதி ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்துவரும் சீர்மிகு முதல்வர் தங்கள் கரம்பற்றி, எங்கள் நெசவாளர் துயர் குறித்து சில வார்த்தைகள் பதிவிட விரும்புகிறோம்.

தமிழக அரசும், மத்திய அரசும் பிறப்பித்துள்ள ஊரடங்கு உத்தரவு காரணமாக, விவசாயத்திற்கு அடுத்து பெரும் தொழிலாக விளங்கிக் கொண்டிருக்கும் நெசவுத் தொழிலை தமிழகத்தில் பல பகுதிகளிலும் செய்துவரும் நெசவாளர் குடும்பங்கள் தற்போது வருமானமின்றி தவித்து வருகின்றனர். வேட்டிகள், லுங்கிகள், சேலைகள், பட்டுச் சேலைகள், துண்டுகள், பனியன்கள், போர்வைகள் என மனித இனத்தின் மானத்தினைக் காத்திடும் உன்னதப் பணியினை செய்துவரும் நெசவாளர் குடும்பங்கள் தற்போது செய்வதறியாமல் திகைத்துள்ளனர். பாவு நூல் கிடைக்காமலும், கூலி கிடைக்காமலும், வேலை வாய்ப்பை இழந்து, உணவுப் பொருட்கள்கூட வாங்க இயலாத நிலையிலும் பலர் உள்ளனர். குறைந்தபட்சம் மின்கட்டணத்தைக் கூட கட்டுவதற்கு அவர்களால் முடியவில்லை.

மற்ற ஏழை, எளிய தொழிலாளர்களைப் போல, நெசவாளர்களும் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர். இதனால் அவர்கள் தங்கள் வாழ்வின் முழு ஆதாரத்தையும் இழந்து, மன உளைச்சலில் தத்தளித்து வருகின்றனர். கொரோனா தொற்று நோயை எதிர்நோக்கும் ஏழை நெசவாளிகள் வறுமை நோயையும் சேர்த்து எதிர்கொள்ளவேண்டிய சூழல் உள்ளது.

ஆகவே, சூழ்நிலைகள் மாறி, தொழில் சீராகி, வேலைவாய்ப்புக் கிடைக்கும்வரை, குடும்பத்துடன் இல்லத்திலேயே தொழில் செய்து, தற்போது முடங்கிக் கிடக்கும் நெசவாளர்களின் இன்னல்களைப் போக்கும் பொருட்டு இடைக்கால நிவாரணமாக தலா ரூ. 5000/- ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு மாதத்திற்கும் ஆக, குறைந்தது 3 மாதங்களுக்காவது வழங்கவும், மின்கட்டண விதிப்பை இரத்து செய்திடவும், தகுந்த ஆணைகள் வழங்குமாறு மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்களன்புள்ள,

KPK செல்வராஜ் | [signature] | [signature]

தலைவர் | பொதுச்செயலாளர் | பொருளாளர்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

30.04.2020 அன்று தங்கள் ஊருக்குச் செல்லமுடியாமல் திருப்பூரில் தங்கியுள்ள செங்குந்த சொந்தங்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்கள் அடங்கிய நிவாரண உதவிகளை தெ.செ.ம.சங்கத்தின் தலைவர் திரு.K.P.K.செல்வராஜ் அவர்களும், மாநில வர்த்தகர் அணி அமைப்பாளர் திரு.K.P.N.முத்துவேலாயுதம் அவர்களும், செங்குந்தபுரம் கிளை செயற்குழு உறுப்பினர் திரு.K.P.K.பாலசுப்பிரமணியம் அவர்களும், செங்குந்தபுரம் கிளையின் துணைத் தலைவர் திரு. M.கணேசன் அவர்களும், மாநில நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரு.P.K. குருநாதன் அவர்களும் வழங்கினார்கள்.

ஆட்கள் தேவை

டிஜிட்டல் மார்க்கெட்டிங் தெரிந்த ஆண் / பெண் வேலைக்குத் தேவை.

தொடர்புக்கு:

Dr.N. முத்துக்குமார், சேலம்.

அலைபேசி: **98427 45045**

வாரியார் அமுத மொழி

- இரை தேடுவதோடு இறையும் தேடு
- வேலை வணங்குவதே வேலை
- மனிதன் வாழ்கின்ற வாழ்க்கை பிறருக்கும், நாட்டுக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும்.
- உணவு தேடுவதோடு உணர்வும் தேடு
- நிமிர்ந்தால் பதர்; பணிந்தால் கதிர்
- உள்ளம் வசமானால் உலகம் வசமாகும்
- அயர்ச்சியில்லா முயற்சி உயர்ச்சி தரும்
- மருந்துக்குப் பத்தியம்; தெய்வத்துக்குச் சத்தியம்
- கண்ணுக்கு அணிகலன் கண்ணோட்டம்

திருமண பதிவுக் கட்டணம்

சென்னை தலைமைச் சங்க அலுவலகத்தில் திருமணத் தகவல் மையத்தில் 1 வருட ஜாதக பதிவுக் கட்டணம் - ரூ.500/-

செங்குந்த மித்திரன்

RNI No. TNTAM/2000/03982

செங்குந்த மித்திரன் சீரார் இதழ்வாழி
எங்குந்தன் பேர்பரப்பும் ஈடில்லாப் - பொங்குந்தன்
கூத்தர் குலம் வாழி! கோலத் தமிழ் வாழி!
ஏத்துநலம் வாழி இசைந்து

– வாரியார் சுவாமிகள்

ஏப்ரல் 2020 மலர்: 20 இதழ்: 4

ஆசிரியர்:

K.P.K.செல்வராஜ்

சந்தா விபரம்

தனி இதழ் : ரூ. 15/–

1-04-2019 முதல் புதிய விளம்பரக் கட்டண விபரம்

கலர்

முழுப்பக்கம்	:	ரூ. 7,000
பின் அட்டை	:	ரூ.10,000
நடுப்பக்கம்	:	ரூ.18,000

கறுப்பு–வெள்ளை

அரைப்பக்கம்	:	ரூ. 2,000
முழுப்பக்கம்	:	ரூ. 3,500

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

South Indian Senguntha Mahajana Sangam

எண்.58, (பழைய எண்.89),
அரண்மனைக்காரன் தெரு,
சென்னை–600001.

அலுவலகம்:
044 – 48653014, 25241431
E-mail: sengunthamithiran@gmail.com
www.sengunthamithiran.com

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்

உலக நாடுகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மக்களை பாதுகாக்கும் பொருட்டு மக்கள் சேவையில் சாரதிராம் அறக்கட்டளை நிறுவனரும், செங்குந்தர் அபிவிருத்தி சங்க பொருளாளருமான திரு. Ln. P.G.P. இராமநாதன் MJF அவர்கள் ஏற்பாட்டில்

நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் 300 நபர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

திருப்பூர் குமரன் நகர், நெசவாளர் காலனி, நேதாஜி நகர் ஆகிய பகுதிகளில் உள்ள எழை நெசவாளர்கள் மற்றும் கூலி தொழிலாளர்கள் சுமார் 800 குடும்பங்களுக்கு ஒரு வாரத்திற்குத் தேவையான காய்கறிகள் இலவசமாக அவரவர் இல்லங்களுக்கே கொண்டு சென்று வழங்கப்பட்டன.

சங்கரன் கோவில் நகரில் 20,000 நபர்களுக்கும், அத்திப்பட்டி கிராமம் மற்றும் சுப்புலாபுரம் கிராமத்தில் உள்ள 5000 நபர்களுக்கும் மொத்தம் 25000 நபர்களுக்கு கபசுர குடிநீர் அனைவரது இல்லம் தேடி நேரில் சென்று வழங்கப்பட்டது.

சங்கரன் கோயில் நகர்ப்புற தெருக்களில் கிருமிநாசினி தெளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத் தலைவர் திரு. S.ராமசுப்பு M.A.,B.Ed., செயலாளர் திரு. M.A. சங்கரமகாலிங்கம், செயற்குழு உறுப்பினர்கள் S.நடராஜன் Ex.MC., ம.சங்கரன், S.முருகன் Ex. MC., S.மகாலிங்கம், தெ.செ.ம.சங்க உறுப்பினர்கள் S.லெட்சுமணன், K.S.P.ஆறுமுகம், S.கணபதி ராமச் சந்திரன், S.கணேசன், வழக்கறிஞர் S.வெங்கடேஷ், மணி, செங்குந்தர் எழுச்சிப் பேரவை M.இலட்சுமி நாராயணன், S.பழனிக்குமார், R.சுந்தர், M.முருகன், P.திருமலைக் குமார், S.பாலகிருஷ்ணன், V.சிவா, M.பேச்சிமுத்து, லெட்சுமணன், ஆ.ஈஸ்வரன், கார்த்திக், பட்டமுத்து, அக்னி இறங்கும் பக்தர்கள் சேவா சங்கம் A.S.முப்பிடாதி, சங்கரமகா லிங்கம், சிவாஜி பாலகிருஷ்ணன், சண்முகசுந்தரம், கணேசன், செங்குந்தர் சமுதாய வரியேடு வசூலிப்போர் சங்கம் சுப்பையா, சங்கரநாராயணன், வேலு, பரமசிவம், செங்குந்தர் இளைஞர் அணி M.சதாசிவ சுப்பிரமணியன், M.கார்த்தி கேயன், அத்திப்பட்டி வேலுமணி, ஐயப்பன், மாரியப்பன், ரவிசங்கர், மாரிகுருசாமி, சுப்புலாபுரம் S.சங்கர சுப்பு, கௌதம், யோ. மதியழகன் ஆகியோர் ஒத்துழைப்புடன் பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. மேலும் மக்கள் பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

உடுமலை செங்குந்த மகாஜன சங்க துணைத் தலைவர் திரு. Gas துரைசாமி அவர்கள் உடுமலை பெரிய கோட்டை பஞ்சாயத்து சுகாதார பணியாளர்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கினார்

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்

வனவாசி செங்குந்தர் சமுதாய சங்கத்தின் சார்பாக 8-04-2020 மாலை 4:00 மணியளவில் வனவாசி முத்துக்குமாரசாமி கோவில் திடலில், வனவாசி பேரூராட்சி தூய்மைப் பணியாளர்கள் 20 பேருக்கு ஊக்கப்பரிசாக அரிசி, பருப்பு, கோதுமை மாவு, ரவை, பிஸ்கட், சோப், மாஸ்க், கைக்குட்டை, காட்டன் துண்டு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அன்புக்கரசு, சந்திரன், சண்முகம், சீனிவாசன், கல்யாணசுந்தரம், துரைசாமி, உத்தமலிங்கம், லோகநாதன், சண்முகம், சதீஷ், வெங்கடாசலம் மற்றும் நமது செங்குந்த சமுதாயப் பெருமக்கள் பங்கேற்றனர்.

21-4-2020 அன்று திருப்பத்தூர் நகர செங்குந்தர் சங்கம் சார்பில் சமுதாயத்தில் நலிந்த 160 குடும்பத்தினர் களுக்கு அரிசி 5 கிலோ மற்றும் பருப்பு உள்ளிட்ட மளிகை பொருட்கள் ரூ 1,00,000/-(ஒரு லட்சம்) மதிப்பீட்டில் வழங்கப் பட்டது. S.P.மணவாளன் Ex MLA, நகர செங்குந்தர் தலைவர் S.P.திருமலை, மணியம், S.M. தேவராசன், M.S. நெடுமாறன் Ex.MC, A.G. ஞானசேகர், Y.D.கிருபாகரன், A.தேவன், M.D.சம்பத், பிரகாசம் Ex.MC மற்றும் இளைஞர் அணியினர் முன்னிலையில் வழங்கப்பட்டது. ஏற்கனவே 8-4-2020ல் அரசினர் மருத்துவமனைக்கு படுக்கை விரிப்பு 500, தலையனை உறை 500ம், ரூ.1,50,000 மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர் திரு. சிவன்அருள் அவர்களிடத்தில் திருப்பத்தூர் செங்குந்தர் கல்வி, மருத்துவ அறகட்டளைகள் சார்பில் வழங்கப்பட்டது.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்

20.04.2020 திங்கட்கிழமை அன்று திருப்பூர் செங்குந்தர் முன்னேற்ற சங்க (TSMS) நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பட்டுக்கோட்டையார் நகர் தென்னம்பாளையம் காலனி வெள்ளியங்காடு அதனை ஒட்டிய பகுதியில் சங்கத்தின் சார்பாக 200 குடும்பங்களுக்கு சங்கத்தின் தலைவர் உஷா P.நட்ராஜ், துணை தலைவர் S.தங்கவேலு, பொருளாளர் ஸ்ரீராம் கணேசன், துணை செயலாளர் KPN.முத்துவேலாயுதம், G.ஸ்ரீனிவாசன், சிட்டி சிதம்பரம், MRA.ரவீந்திரன், மார்கோ துரைசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் ஊராட்சி மன்றத் தலைவர் தனலட்சுமி மதியழகன் செங்குந்தர் குன்னம் அண்ணா நகர் பகுதியில் சுமார் 120 ஆதரவற்ற குடும்பங்களுக்கு 5 கிலோ அரிசி, பருப்பு, எண்ணெய் மற்றும் காய்கறிகள் ரூ. 350 மதிப்புள்ள தொகுப்பை வழங்கினார்.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்

கடலூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் துணைத் தலைவரும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயற்குழு உறுப்பினருமான தொழிலதிபர் திரு.Ln.MJF. Dr.P.T.ராஜன் B.Sc மற்றும் அவரது மகன் P.T.R.பெரியதம்பி M.B.A இருவரும் இணைந்து பெரியசாமி முதலியார்-செல்லம்மாள் அறக்கட்டளை தங்கராசு முதலியார் - தமிழ்மணி,செந்தாமரை அறக்கட்டளை சார்பாக மாவட்ட ஆட்சித்தலைவரிடம் ரூ. 2,00,000/- (ரூபாய் இரண்டு லட்சம்) கொரோனா நிவாரண நிதிக்கு வழங்கினார்.

திரு. P.T.இராஜன் அவர்கள் கடந்த 16-4-2020 முதல் 18-4-2020 வரை கடலூர் மாவட்டம் திட்டக்குடி மற்றும் அதன் சுற்று வட்டார ஊர்களான கோழியூர், வசிஷ்டபுரம், இளமங்களம், கூத்தப்பன்குடிகாடு மற்றும் சில கிராமங்களில் உள்ள ஏழை மக்களுக்கு ரூ. 410/- மதிப்பில் 3000 பேர்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்கள் வழங்கினார்கள். மதுரையிலிருந்து ரூ.1,00,000/-ஒரு லட்சம் அளவிற்கு 27 மூலிகைகள் அடங்கிய மருத்துவ மூலிகைகளை வாங்கி வந்து தமது இல்லத்தில் மருத்துவ குடிநீர் தயார் செய்து பல்லாயிரக்கணக்கானோருக்கு வழங்கினார்கள்.

மேலும், தொழிலதிபர் திரு.Ln.MJF. Dr.P.T.ராஜன் B.Sc அவர்களும் மற்றும் அவரது மகன் திரு. P.T.R.பெரியதம்பி M.B.A இருவரும் இணைந்து திட்டக்குடி துணை கண்காணிப்பாளர் முன்னிலையில் தூய்மைப் பணியாளர்களைப் பாராட்டி சால்வை அணிவித்தனர்.

கொரோனா நுண்ணுயிரி

கொரோனா நுண்ணுயிரி
கொலைகார நுண்ணுயிரி !
மனிதரான அனைவரையும்
மிரளவைக்கும் நுண்ணுயிரி !

குழந்தைமுதல் பெரியவர்க்கும்
கொள்ளிவைக்கும் நுண்ணுயிரி !
அழுதுருண்டு புரண்டாலும்
அலட்சியத்தில் நுண்ணுயிரி !

பலமிக்க வீரருக்கும்
பயங்காட்டும் நுண்ணுயிரி !
குலதெய்வம் வேண்டவைக்கும்
கொடும்பாவி நுண்ணுயிரி !

நெருக்கமான உறவினையும்
நெருங்கவிடா நுண்ணுயிரி !
தெருக்களிலே நடமாடத்
தடைவிதிக்கும் நுண்ணுயிரி !

பச்சைஊன் உண்பதால்
பரவுமிந்த நுண்ணுயிரி !
இச்சைகொண்டு எவரையும்
இழுக்குமிந்த நுண்ணுயிரி !

சளிக்காய்ச்சல் மூலமாக
சாய்க்கின்ற நுண்ணுயிரி !
புளிக்கரைக்கும் வயிற்றினிலே
புதிரான நுண்ணுயிரி !

தடுக்கவரும் மருத்துவரின்
தடமழிக்கும் நுண்ணுயிரி !
படுக்கப்போட் டனைவரையும்
பயணமேற்றும் நுண்ணுயிரி !

என்றுமிதை அழிப்பதற்கு
எதிரியில்லா நுண்ணுயிரி !
கன்றுபோல இருப்போரைக்
கலங்கவைக்கும் நுண்ணுயிரி !

சீனமண்ணில் செனித்துவிட்டு
செகம்பரப்பும் நுண்ணுயிரி !
வானவரும் பயந்தொடுங்க
வைத்துவிடும் நுண்ணுயிரி !

காற்றிடையே பரவியுயிர்
கதைமுடிக்கும் நுண்ணுயிரி !
ஊற்றுபோல பெருக்கெடுத்து
உலகழிக்கும் நுண்ணுயிரி !

கவிஞர். அ.முத்துசாமி, தாரமங்கலம்.

09-04-2020 அன்று ஈரோடு மாவட்டம் பெரியசேமூர் செங்குந்த மகாஜன சங்கக் கிளையின் சார்பாக கப சுப குடிநீர் கொரோனா தடுப்பு கசாயம் மற்றும் மாஸ்க் வழங்கி மக்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. செங்குந்த மகாஜன சங்க ஈரோடு மாவட்ட செயலாளர் திரு. ஆசைத்தம்பி செங்குந்தர் அவர்கள் மற்றும் ஜே.எஸ். இளைஞர் படை நிர்வாகிகள் யுனிவர்செல் ப்ராசசிங் மில் நிறுவனத்தின் உரிமையாளர் திரு.நந்தகோபால். வழக்கறிஞர் திரு.ஜெகதீஷ்குமார், வெண்டிபாளையம் கிளையைச் சேர்ந்த திரு.பிரதாப் மற்றும் திரு.விக்ரம், வீரப்பன்சத்திரம் கிளையைச் சார்ந்த திரு.பாலாஜி, பெரிய சேமூர் கிளையைச் சார்ந்த நவரச நாயகன் கார்த்திக், ஆனந்த் பெரியவலசு பகுதியைச் சார்ந்த பாக்ஸர் கிருபா செங்குந்தர், திண்டல் பகுதியைச் சார்ந்த திரு. கார்த்திக் மற்றும் அவர் சகோதரர், CNC கல்லூரி பகுதியைச் சார்ந்த ராகுல் சுந்தர் ஆகியோர் கலந்துகொண்டு மக்கள் சேவை ஆற்றினர்.

திட்டக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் சுமார் 80,000 நபர்களுக்கு தொழிலதிபர் திரு.Ln.MJF. Dr.P.T.ராஜன் B.Sc அவர்கள் கொரோனா தடுப்பு மருந்தாகிய கபசுர குடிநீர் வழங்கினார்.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்

ராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கத்தில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க மாநில செயற்குழு உறுப்பினர் என்.வி.ஜீவரத்தினம் அவர்கள் நலிவடைந்த உதவி தேவைப்படுகின்ற மக்களுக்கு ரூபாய் 25 ஆயிரம் மதிப்புள்ள மளிகை பொருட்களை வழங்கினார்.

ராணிப்பேட்டை மாவட்டத் தலைவர் A.சுப்பிரமணியம் மற்றும் அவரது குடும்பத்தார் அரக்கோணம் பகுதிகளில் துப்புரவு தொழிலாளர்களுக்கு உணவும், ஒரு மாதத்திற்கு தேவையான மளிகை பொருட்களை நேரடியாக வழங்கினார். அத்துடன் அரசு அலுவலர்களின் வேண்டுகோளின்படி வட்டாட்சியர் மூலமாகவும் காவல்துறை துணை கண்காணிப்பாளர் மூலமாகவும் மிகவும் உதவி தேவைப்பட்ட நலிந்த மக்களுக்கு சுமார் ரூ. 6 லட்சம் அளவில் முழுமையான அர்ப்பணிப்பு உணர்வோடு வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டம், ரெட்டணை செங்குந்தர் சங்கம் சார்பில் 90 நெசவாளர் குடும்பங்களுக்கு கோரோனோ துயர்துடைப்பு நிவாரண நிதி அன்பளிப்பு பைகள் வழங்கப்பட்டன. 10kg அரிசி, மளிகைப் பொருட்கள், எண்ணை, பருப்பு வகைகள், காய்கறிகள், ஆப்பிள், மாதுளம், வாழை, கிரினிப் போன்ற பழங்கள் வழங்கப் பட்டன. மேலும் ரொக்கப் பணம் ரூ.200/- அனைத்து பயனாளிகளுக்கும் வழங்கப் பட்டது. ஏறக்குறைய ரூ.1,35,000/- செலவிடப்பட்டது. விழா ஏற்பாடுகளை தலைவர் மஹாலிங்கம், செயலாளர் பிரபாகரன், பொருளாளர் குமரகுருபரன் மற்றும் நிர்வாகிகள் சொந்த பங்களிப்புடன் நிதி உதவிகளை காவல்துறை ஆய்வாளர் திரு,ராஜா திண்டிவனம் லயன்ஸ் கிளப், தொழில் அதிபர் திரு P.T.ராஜன், கணபதி மற்றும் சுப்பராயன், ஆகியோர்களிடம் பெரியளவில் நிதிஉதவி பெற்று சிறப்பாக செய்தி ருந்தனர். சமூக இடைவெளி முறையாகப் பின்பற்றப்பட்டது.

கீழ் புவனகிரி செங்குந்த மகாஜன சங்கம் சார்பாக நலிவடைந்த நம் குல சொந்தங்கள் 25 குடும்பங்களுக்கும் ஆலயத்தில் பணி புரியும் சிப்பந்திகளுக்கும் தலா 10 கிலோ அரிசி ரூபாய் ஆயிரம் மதிப்புள்ள மளிகை பொருட்கள் ரூபாய் 250 மதிப்புள்ள காய்கறிகள் ரொக்கம் ரூபாய் 700 ஆகக் கூடுதல் தலா ரூபாய் 2500 மதிப்புள்ள பொருட்கள் வழங்கப்பட்டன. விழா விபரம் அறிந்தவுடன் தானே முன்வந்து ரூபாய் 10 ஆயிரம் கடலூர் மாவட்ட முன்னாள் இளைஞரணி தலைவர் திரு பி.எம். பாபுஜி அவர்கள் வழங்கினார்.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்

சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கமும் சேலம் அம்மாப்பேட்டை அருள்மிகு செங்குந்தர் குமரகுரு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் மற்றும் அருள்மிகு செங்குந்தர் மாரியம்மன் திருக்கோயில் அமைந்துள்ள ஆன்மீக குழுக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து கொரோனாவால் பாதிக்கப்பட்டு வேலை வாய்ப்பு இன்றி இருக்கும் நம் செங்குந்த சொந்தங்கள் அனைவருக்கும் சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் திரு.U.V.சடையப்பன் அவர்களின் வழிகாட்டுதலின்படி பொதுச்செயலாளர் திரு P.P.ராஜகோபால் அவர்கள் முதன்மை தலைவர் திரு.Aலோகநாதன் அவர்கள் ஆகியோர் தலைமையில் பொருளாளர் திரு K.P.நக்கீரன், முதன்மை செயலாளர் திரு. S.சரவணன், N.P.பிரபு, N.வாசு, P.சிகாமணி, M.லோகநாதன், M.N.ஜீவா ஆகியோர் முன்னிலையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வேலை வாய்ப்பு இன்றி இருக்கும் நம் செங்குந்த சொந்தங்கள் அனைவருக்கும் ரூபாய் ஐந்து லட்சம் மதிப்புள்ள ஐந்து கிலோ அரிசி மற்றும் மளிகை பொருள்கள் 3000 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் இந்நிகழ்ச்சியில் பிரபு சங்கர் ரமேஷ் குமார், வெங்கடேசன் சாரதி, பாலகிருஷ்ணன், செந்தில்குமார். சிவஞானம், மணி, பாலசுப்பிரமணியன், நேரு, அரிபுத்திரன், திருப்பதி, லோகநாதன், சீனிவாசன், கருணாநிதி, ஆறுமுகம், கந்தவேல், சம்பத், சிவஞானம், வெங்கடாசலம், பழனி மற்றும் கிளை சங்கத்தின் தலைவர் மற்றும் நிர்வாகிகள் ஆன்மிக குழுக்களின் தலைவர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஒப்பற்ற விடுதலைப் போராட்ட வீரர், தமிழறிஞர், மாமனிதர்

கு.மு.அண்ணல்தங்கோ

பிறப்பு

குடியாத்தம் முருகப்ப முதலியார் - மாணிக்கம்மாள் தம்பதியினருக்கு அப்போதைய இராமநாதபுரம் மாவட்டம், கண்டவிராயன்பட்டியில் 12.04.1904ஆம் ஆண்டு கு.மு. அண்ணல்தங்கோ அவர்கள் பிறந்தார்.

இளமைக் காலத்திலேயே தந்தையார் இறந்துவிட்டதால் தொடக்கக்கல்வி மட்டுமே பள்ளியில் பயில வாய்ப்புக் கிடைத்த இவர் தமது சுயமுயற்சியால் தமிழ் மற்றும் பல மொழிகளில் புலமை பெற்றார்.

விடுதலைப் போராட்டத்தில்..

- கு.மு.அண்ணல்தங்கோ அவர்கள் 1918ஆம் ஆண்டில் காங்கிரஸ் பேரியக்கத்தில் சேர்ந்தார்.
- தந்தை பெரியார் அவர்களுடன் சந்திப்பு ஏற்பட்டது.
- 1923ஆம் ஆண்டில் கள்ளுக்கடை மறியல், நாக்பூர் கொடிப் போராட்டம், 1925ஆம் ஆண்டில் வைக்கம் போராட்டம், 1927ஆம் ஆண்டில் சைமன் குழு எதிர்ப்பு போராட்டம், நீலன்சிலை உடைப்புப் போராட்டம், 1930ஆம் ஆண்டில் உப்பு எடுப்பு அறப் போராட்டம் போன்ற பல போராட்டங்களில் முன்னணித் தொண்டராக, படைத்தலைவராக பங்கேற்று ஆங்கிலேயர் ஆட்சியில் 5 முறை சிறைக்குச் சென்று ஏறக்குறைய 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவித்தார்.
- 1934ஆம் ஆண்டில் குடியாத்தம் நகரத்தில் மகாத்மா காந்தி அவர்களை பொது மக்களுக்கு அறிமுகப் படுத்திய பெருமை இவருக்கு உள்ளது.
- விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக மத்திய அரசு வேலூரின் மையப் பகுதியில் அளித்த 15 ஏக்கர் நிலத்தை அரசுக்கே திருப்பியளித்த ஒப்பற்ற தியாகி அவர்.
- 1972ஆம் ஆண்டில் புதுடில்லியில் நடைபெற்ற சுதந்திர தின வெள்ளி விழாவில் வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக் கப்பட்ட 5 தியாகிகளில் அவரும்

ஒருவர். அன்றைய பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் தாமிரப் பதக்கம் வழங்கி நேரில் பாராட்டினார்.

தனித்தமிழியக்க வளர்ச்சியில்..

- 1936ஆம் ஆண்டில் கருத்து வேறுபாடுகளால் தந்தை பெரியார் அவர்களைப் போல காங்கிரசிலிருந்து விலகிய பிறகு தமிழ் மொழியின் வளர்ச்சி மற்றும் தனித் தமிழியக்க வளர்ச்சிக்காக தம் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார்.
- 1937, 38ஆம் ஆண்டுகளில் தமிழ் நில, தமிழர் உரிமை மாநாடுகளை வேலூர், வடசேரி ஆகிய இடங்களில் நடத்தினார்.
- 1938ஆம் ஆண்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றார்.
- 1939ஆம் ஆண்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர் நீத்த (தாளமுத்து) நடராசன் அவர்களின் இறுதிச்சடங்கில் பேரறிஞர் அண்ணா அவர்களுடன் கலந்து கொண்டு உரையாற்றினார்.
- 1942ஆம் ஆண்டில் தமிழ்நிலம் என்ற பத்திரிக்கையைத் தொடங்கி நடத்தினார்.
- 1944ஆம் ஆண்டில் திராவிடர் கழகம் உருவான போது அதற்கு தமிழர் கழகம் என பெயர் சூட்ட வலியுறுத்தினார்.
- வேலூரில் 1937ஆம் ஆண்டில் உலகத் தமிழ் மக்கள் தற்காப்புப் பேரவை என்ற அமைப்பை ஏற்படுத்தி தமது வாழ்நாள் இறுதிக்காலம் வரை ஒவ்வொரு ஆண்டும் தைத்திங்களில் தமிழர் திருநாள் விழாவை (பொங்கல் திருநாள்) மிகச் சிறப்பாக வேலூர் மாநகரத்தில் பல தமிழ்ச் சான்றோர்களைக் கலந்து கொள்ள வைத்து தமிழ்மொழி உணர்வை ஏற்படுத்தினார்.
- கு.மு.அண்ணல்தங்கோ அவர்களின் தூய தமிழ்த் தொண்டினைப் பாராட்டும் வகையில் அழகர் அடிகள் 1960ஆம் ஆண்டில் “தூய தமிழ்க்காவலர்” என்ற விருதை அவருக்கு அளித்து கௌரவித்தார்.

அண்ணல்தங்கோ அவர்களுடன் பழகிய தலைவர்கள், சான்றோர்கள்

- தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பெருந்தலைவர் காமராசர், பக்தவச்சலம், பட்டுக் கோட்டை அழகிரி, ஜீவானந்தம் போன்ற தமிழகத்தின் முக்கிய அரசியல் தலைவர்களிடம் நெருங்கிப் பழகியிருக்கிறார்.
- மேலும் மறைமலை அடிகள், பாவேந்தர் பாரதிதாசன், தேவநேயப் பாவாணர், கி.ஆ.பெ. விசுவநாதம், திரு.வி.க., வெள்ளை வாரணனார், சோம சுந்தர பாரதியார், பேராசிரியர் மா.ராச மாணிக்கம், ஔவைதுரைசாமி, சி.பா.ஆதித்தனார், சன்டே அப்சர்வர் பத்திரிக்கையின் நிறுவனர் பி.பாலசுப்பிரமணியம், திருமுருக கிருபானந்த வாரியார் போன்ற எண்ணற்ற தமிழ்ச் சான்றோர்களிடம் நெருங்கிப் பழகியவர்.

கு.மு.அண்ணல் தங்கோ அவர்கள் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் சம்பந்தி என்பது குறிப்பிடத்தக்கது.

திரைப்படப் பாடலாசிரியர் மற்றும் இலக்கியப் பணிகள்

நடிகர் திலகம் சிவாஜிகணேசனை திரைஉலகுக்கு அறிமுகப்படுத்திய பராசக்தி திரைப்படத்தின் இறுதியில் முழங்கும் "எல்லோரும் வாழ வேண்டும்" என்ற பாடலையும், பெற்ற மனம், பசியின் கொடுமை, கோமதியின் காதலன் ஆகிய திரைப்படங்களிலும் தமிழ்மொழி உணர்வை சமூக உணர்வை வெளிப்படுத்தும் வகையில் பாடல்களை எழுதியுள்ளார்.

மேலும் தமிழ் மொழியின் சிறப்பை அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழ் நடையில் பலநூல்களை எழுதியுள்ளார்.

நூல்கள் நாட்டுடைமை

கு.மு.அண்ணல்தங்கோ அவர்களின் படைப்புகளை கௌரவிக்கும் வகையில் தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2008ஆம் ஆண்டில் நாட்டுடைமை யாக்கி கு.மு.அண்ணல் தங்கோ அவர்களின் குடும்பத்தினரை கௌரவித்து பெருமை சேர்த்திருக்கிறார்.

மறைவு

தாய் நாட்டுக்காகவும், தாய் மொழி தமிழின் வளர்ச்சிக்காகவும், திருக்குறள் நெறியைப் பரப்பவும், தனித்தமிழை வளர்க்கவும், தமது வாழ்நாள் இறுதிவரை பாடுபட்ட கு.மு.அண்ணல்தங்கோ அவர்கள் 1974ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 4ம் நாள் இவரது நண்பரான ஜி.டி.நாயுடு அவர்கள் மறைந்த அதே நாளில் இவரும் காலமானார். (அன்றைய தினம் வைகுண்ட ஏகாதசி என்பது குறிப்பிடத்தக்கது)

கு.மு.அண்ணல்தங்கோ அவர்கள் என்றென்றும் தமிழ்கூறும் நல்லுலகில் தமிழர்களின் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருப்பார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஈரோடு மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. M.ஆசைத்தம்பி, செயற்குழு உறுப்பினர்கள் திரு. தா.கு.வச்சரவேலு, திரு.கிட்டு(எ)V.கிருஷ்ணசாமி ஆகியோர் தலைவர் அவர்களை 19.03.2020 அன்று நேரில் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

மதுரை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் உதவும் கரங்களால் நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு 20-04-2020 அன்று நடைபெற்றது. மதுரை மாவட்டத் தலைவர் R.காந்தி, செயலாளர் B.ரவீந்திரன், பொருளாளர் P.திருநாவுக்கரசு மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர்கள் N.உதயகுமார், S.ஆண்டியப்பன், K. முத்துவேல், சில செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மதுரை மாவட்ட செங்குந்தர்களின் ஈகை குணம் கொண்ட பலரும் சேர்ந்து நன்கொடைகளை தாராளமாக வழங்கி இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

காலத்தின் சூழ்நிலையால் அல்லல்படும் நம் மக்கள் சுமார் 200 குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி, 1 கிலோ துவரம் பருப்பு, முகக்கவசம் போன்றவைகளை அந்தந்த உறவின்முறைகள் உள்ள பகுதிக்கு சென்று வழங்கினார்கள்.

மதுரையில் தல்லாகுளம், கோரிப் பாளையம், திருவாப்புடையார் கோவில், மண்டலமாணிக்கம், புதுத்தெரு, மதிச்சியம், முதலியார் காலனி, திருப்பரங்குன்றம், சாம நத்தம், அனுப்பானடி, முள்ளிப் பள்ளம், தென்கரை, மதுரை வாழ் எட்டயபுரம், அபிராமம், சாம்பவர் வடகரை, புளியங்குளி சிந்தாமணி, அம்மையார்பட்டி, செவல்பட்டி மற்றும் கரும்பாலை 14 ஊர் உறவின் முறைகளில் உள்ள மக்களுக்கு நேரிலே சென்று வழங்கி மதுரை மாவட்ட செங்குந்தர்களின் இன்றைய வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாய் விளங்கியது மதுரை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கம்.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை எந்த ஒரு நல்ல செயல்பாட்டிற்கும் தலைவர் R.காந்தி அவர்களின் தொடக்கமும் அவருக்கு பக்கபலமாக நின்று செயல்படும் செயலாளர் ந.ரவீந்திரன், பொருளாளர் P.திருநாவுக்கரசு ஆகியோரின் விடாமுயற்சியும், மாநில செயற்குழு உறுப்பினர்கள் N. உதயகுமார், S.ஆண்டியப்பன், K.முத்துவேல் ஆகியோர் ஒத்துழைப்பும் வழங்கினர்.

மஞ்சள் மகிமை

இப்பத்தான் புரியுது திருவிழா முடிந்தவுடன் மஞ்சள் தண்ணி ஊத்தி விளையாடுவது எதுக்குனு. திருவிழாவுக்கு பல பேர் வந்து போயிருப்பாங்க. அதுல ஏதாவது கிருமித் தொற்று வர வாய்ப்பு இருக்கலாமுன்னு எல்லாரும் மஞ்சத் தண்ணிய ஊத்திகிட்டு விளையாட (Sanitizing) சொல்லியிருக்காங்க பெரியவங்க. அதே மாதிரி காப்பு கட்டீட்டா ஊரைவிட்டு யாரும் வெளியே போகக் கூடாது, வெளியே போய் கிருமிகளை ஊருக்குள்ள கொண்டு வந்திடக்கூடாதுன்னு உருவாக்கின முறைகள் போல. அந்தக் காலத்திலேயே தனிமைப் படுத்தி (Quarantine) முன்னெச் சரிக்கையா வாழ்ந்திருக்காங்க. இப்போ நாமும் பின்னோக்கி வந்துகிட்டு இருக்கோம், இழந்த பாரம்பரியத்தை மீட்க..

28.04.2020 அன்று தாண்டாம் பாளையம் செங்குந்த சமூகத்தை சேர்ந்த நமது சொந்தங்கள், நெசவு தொழில் இல்லாமல் வறிய நிலையில் உள்ளனர், அவர்களுக்கு ஜெ.எஸ். இளைஞர் படை சார்பில் அரிசி, மளிகை பொருட்கள் தொகுப்பு மாவட்ட சங்க செயலாளர் சோழா டெக்ஸ் ஆசைத்தம்பி, ஜெ. எஸ்.இளைஞர் படை மாநில செயலாளர், யுனிவர்சல் பிராசஸ், கே.என்.நந்தகோபால், மாவட்ட வழக்கறிஞர் அணி, செயலாளர் ஜெ.கே. என்கிற ஜெகதீஷ்குமார், கிளை செயலாளர் க.வடிவேல், நிர்வாகிகள், எஸ்.கே.பழனிசாமி, செல்வ. ந.மூர்த்தி, தாமரை சரவணன், மு.நாகலிங்கம், இளைஞர் அணி, தியாகி திருப்பூர் குமரன் பேரவை, க.ப.இராமசாமி செங்குந்தர் அறக்கட்டளை நிர்வாகிகள் எஸ்.மனோகரன், ஜோ.யுவராஜ், அ.பத்மநாபன் , சமுதாய பெருமக்கள் கலந்து கொண்டனர்,

கொரோனா ஊரடங்கு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் வகையில் 'தியாகச்சுடர் மாளிகை, ஜமீன் எம்.ஏ.குப்புசாமி முதலியார் - ஜமீன் அங்கப்ப முதலியார் - பொன்னம்மாள் டிரஸ்ட்' சார்பாக எம்.ஏ.சர்வலோக தயாபரன் மற்றும் ஜெயப்பிரகாஷ் பிரபு ஆகியோர் தலா 5 கிலோ அரிசி சிப்பம் 300 குடும்பங்களுக்கு தருவதற்கு மொரட்டுப்பாளையம் பஞ்சாயத்துத் தலைவர் பிரபுவிடம் வழங்கினர்.


பொன்விழா காணும் பாரம்பரியம்
SINCE 1961
50
NATIONAL
SINCE 1961
NATIONAL
COTTON DHOTIES AND SHIRTINGS
MADE WITH 100% SUPER FINE COTTON
NATIONAL KHADI STORES
2/646 A & 2/646 B, VENUS GARDEN,
MANGALAM MAIN ROAD,
ANDIPALAYAM (PO)
TIRUPUR - 641 687
PHONE:0421 2262180, 2262380
FAX:2262124
EMAIL:khadiking@airtelmail.in

நெசவாளர் துயர்காணீர்!

பாவிரித்து அள்ளுகட்டி
பாவடியே அதிசயிக்க
பூவிரித்து மணம்பரப்பும்
பூக்களைப்போல் நெசவாளி !
ஆவிதனை விட்டுழைக்கும்
அண்ணலவன் குடும்பம்தான்,
கூவுகின்ற குரலாலே
குவலயமே ஆடிப்போகும் .

காலைமுதல் மாலைவரை
கடினமாக உழைத்தாலும்
வேலைக்குத் தக்கபடி
வியன்கூலி கிடைப்பதில்லை ,
வேளைக்கு உணவுகூட
வயிறாரக் கிட்டாது ,
சாலைபோல் இவர்வாழ்க்கை
சஞ்சலமே மிகுந்திருக்கும் .

இத்தொழிலைச் செய்வதற்கு
இரண்டொருவர் போதாது,
மொத்தமாகக் குடும்பத்தார்
முழுவதுமாய்ச் செய்யவேண்டும்,
இத்தரையில் தவழுகின்ற
இன்குழந்தை உதவவேண்டும்,
பத்துபேர்கள் உழைத்தாலும்
பலனில்லை இத்தொழிலில் .

உச்சிமுதல் கால்வரைக்கும்
ஒவ்வொன்றும் கடமையைக்
கச்சிதமாய்ச் செய்திடணும்
கால்வயிறு நிரம்புதற்கு !
இச்சையாய் இத்தொழிலை
எவருமிங்கு செய்வதில்லை !
பச்சையாய்ச் சொல்வதெல்லாம்
பழக்கமானத் தொழிலென்பர்.

மானத்தைக் காக்கின்ற
மாசற்ற இத்தொழிலால்
தானமுமே செய்திடுவர்
தனக்கெதுவும் வைத்திராமல் ,
கானமெழுப் பும்தறியில்
கவலைகள் மறந்துதினம்
மோனநிலைப் பெற்றுய்ய
முதலீடு அதுதானே !

கவிஞர்.அ.முத்துசாமி,
தாரமங்கலம்

குழந்தைகள் விரும்பியதை செய்ய விடுவது சரியா?

புதுப்புது தொழில்நுட்ப விஷயங்களைக் கற்றுக் கொள்ளும் ஒரு தலைமுறையை எவ்வாறு கூலாக சமாளிப்பது என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்.

நீங்கள் உங்களுடைய குழந்தையுடன் நண்பர்களாக இருக்க முயலுங்கள். அது உங்களுக்கும் உங்களுடைய குழந்தைக்கும் இடையே இருக்கும் தலைமுறை இடைவெளியை குறைக்க உதவும். உங்களுக்கு இடையே ஒரு வலுவான பிணைப்பை உருவாக்க உதவும். அதுவே உங்களையும், உங்களுடைய குழந்தையையும் இணைக்க உதவும் மிகச் சிறந்த வழியாகும்.

வேகமாக வளர்ந்து வரும் மற்றும் ஒவ்வொரு நாளும் புதுப்புது தொழில்நுட்ப விஷயங்களைக் கற்றுக் கொள்ளும் ஒரு தலைமுறையை எவ்வாறு கூலாக சமாளிப்பது என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்.

குழந்தை குழந்தையாகவே இருக்க வேண்டும். அதுவே மிகவும் முக்கியம். அவர்களுடைய குழந்தைத்தனத்தை ரசியுங்கள். அவர்களை சீக்கிரம் பெரியவர்களாக தூண்டாதீர்கள். இழந்த இளம் பருவத்தை மீண்டும் பெற இயலாது என்பதை தயவு செய்து நினைவில் கொள்ளுங்கள்.

பொதுவாக, நீங்கள் உங்கள் குழந்தையின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றுவதே அவர்களின் மீது நீங்கள் காட்டும் அன்பை அவர்களுக்கு உணரச் செய்யும் எனத் தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இது முற்றிலும் தவறானது. இதை இப்போதே நிறுத்த வேண்டும். அதற்கு பதிலாக, உங்கள் குழந்தையின் மீது உண்மையான அன்பு செழுத்துங்கள்.

உங்கள் குழந்தைக்கு கற்பிக்கும் போது நீங்கள் உங்கள் வாழ்க்கையில் செய்யும் விஷயங்களை அனுபவித்து ரசிக்க கற்றுக் கொள்ளுங்கள். அது, எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். உங்கள் குட்டி தேவதையைப் போன்ற ஊர்ந்து போவதாகட்டும் அல்லது ஒரு பிடித்த பாடலை பாடுவதாகட்டும். அதை எப்பொழுதும் அனுபவிக்க கற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்குள் இருக்கும் குழந்தையை வெளிக் கொணருங்கள்.

உங்களுடைய குழந்தை உங்களால் இந்த உலகிற்கு வந்தது என்னும் உண்மையை புரிந்து கொள்ளுங்கள். அதே சமயம் நீங்கள் அவர்கள் செய்யும் எல்லா செயலையும் உங்கள் வழிக்கு கொண்டு வர முடியாது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் செய்ய வேண்டியது என்னவெனில் அவர்களின் அனைத்து காரியங்களிலும் துணை புரியுங்கள். அவர்களுக்கு உங்களுடைய ஆதரவு உள்ளது என்பதை தெரிவியுங்கள்.

உங்களின் நிறைவேறாத கனவுகளை உங்களுடைய குழந்தையின் மீது சுமத்தி அவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்க முயற்சி செய்யாதீர்கள். அவர்கள் விருப்பம் எது என்பதை அவர்களே முடிவு செய்யட்டும். ஆனால், குழந்தைகள் உங்கள் கருத்து மற்றும் ஆலோசனைகளைப் பெற உங்களிடம் வருவதை கண்டிப்பாக உறுதி செய்து கொள்ளுங்கள்.

பெற்றோராகிய நீங்கள் குழந்தைகளின் முன் கெட்ட வார்த்தைகள் மற்றும் அசிங்கமான சண்டை போட வேண்டாம். ஏனெனில் குழந்தையின் கிரகிப்புத் திறன் என்பது மிகவும் அபாரமானது.



திண்டுக்கல் மாவட்ட செ.ம.சங்கத்தின் தலைவர் திரு.வெ.தண்டபாணி அவர்கள் 19.03.2020 அன்று தலைவர் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

வேலூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம் மற்றும் வேலூர் மாவட்ட வாரியார் கல்வி மருத்துவ அறக்கட்டளை சார்பாக குடியாத்தம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் குடியாத்தம் நகராட்சி மற்றும் அரசு மருத்துவமனை தினக்கூலிகள் மற்றும் நெசவாளர்கள், தினக்கூலிகள், முதியோர்கள் அனைவருக்கும் கொரோனா நிவாரண பொருட்கள் வேலூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தலைவர், மாநில செங்குந்த மகாஜன சங்கத் துணைத்தலைவர் திரு. சி. என். தட்சிணாமூர்த்தி அவர்களின் தலைமையில் வழங்கப்பட்டது.

உடன் வேலூர் மாவட்ட செயலாளர் எம். ரவி, மாநில செயற்குழு உறுப்பினர் எஸ். மோகனராமன் மாவட்ட இளைஞரணி தலைவர் எஸ்.கார்த்திகேயன், டி.தர்மலிங்கம் தேங்காய் வியாபாரம், காளியம்மன் பட்டி தலைவர் தேவராஜ், நேருஜிநகர் ஜி. அன்பு, இந்திராநகர் பன்னீர், மாவட்ட இளைஞரணி துணைத் தலைவர் பாலாஜி, கோவிந்தப்ப நகர் கிளை தலைவர் ஜோதி ஆகியோர்கள் உடனிருந்து பணியாற்றினார்கள்.

அதில் சத்துவாச்சாரி வேலூர், கே.வி. குப்பம், நேருஜிநகர், காளியம்மன் பட்டி. இந்திராநகர், சாமுண்டிபுரம் பாவேடும் தோப்பு, புவனேஸ்வரி பேட்டை பள்ளம், மேடு, மணவாளன் நகர், சித்தி விநாயகர் கோயில் தெரு, பிச்சனூர், பாலகங்கா தர திலகர் தெரு, கட்டபொம்மன் தெரு, நேதாஜி தெரு, பாரதியார் தெரு, கங்காதரசுவாமி மடாலய தெரு, வாரியார் நகர், சுதந்திர வீதி, கஸ்தூரிபாய் மேட்டுத் தெரு, இருளர் காலனி, ஜெ.ஜெ.நகர், தட்டிமான பல்லி அருந்ததியர் காலனி, பாக்கம் செல்வபெருமாள் நகர், பொன்னம் பட்டி, செதுக்கரை, கஸ்பா, ஆர்.எஸ். நகர், புதிய பேருந்தி நிலையம் பின்புறம். புதுப்பேட்டை பண்டர் காலனி, அசோக் நகர் ஜீவாநகர், அருணாச்சலநகர், கொண்ட சமுத்திரம், பாண்டியன் நகர்,

வேலாயுதம்பட்டி, சுமார் 10,000 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

கே. எம். ஜி. கல்வி நிறுவனங்களின் தலைவர், வாரியார் கல்வி /மருத்தவ அறக்கட்டளையின் கொடைவள்ளல் திரு. கே.எம்.ஜி. சுந்தரவதனம், மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத் தலைவர் மாநில செங்குந்த மகாஜன சங்க துணைத்தலைவர் திரு. சி.என். தட்சிணாமூர்த்தி, வேலூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்க துணைத் தலைவர் திரு. எஸ்.டி. மைவண்ணன், வேலூர் மாவட்ட வாரியார் கல்வி/ மருத்துவ அறக்கட்டளை செயலாளர் திரு. ஆசிரியர் எம். தண்டபாணி, மாவட்ட செங்குந்த மகாஜன சங்க செயலாளர் திரு. எம். இரவி மற்றும் அனைத்து கிளைச்சங்க நிர்வாகிகள், மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டு சிறப்பான முறையில் வழங்கப்பட்டது.

மருத்துவத் தகவல்கள்

கொய்யாப்பழம் அதிகம் சாப்பிட்டால் வயிற்றுச் சிக்கல். கொய்யாப்பழ ஏப்பம் உண்டாகும். இதற்கு மாற்றாக ஒரு தேக்கரண்டி பெருஞ்சீரகத்தைப் பொடி செய்து மோரில் சாப்பிட வேண்டும்.

பம்பிளிமாசு அதிகம் சாப்பிடுவதால் தலையில் குளிர்ச்சி உண்டாகி நீர்கொள்ளும். இதற்கு மாற்றாகக் கடுக்காய்த் தோலைப்பொடி செய்து வெந்நீரில் சாப்பிடலாம்.

இரவில் நெல்லி அதிகமாகச் சாப்பிட்டால் தொண்டை கட்டும், வயிறு உப்பும், இதற்கு மாற்றாக ஒரு தேக்கரண்டி தேன் சாப்பிடலாம். அதனால்தான் இரவில் நெல்லிக்காய் சாப்பிடக் கூடாது என்பார்கள்.

ஆட்டிறைச்சி அதிகம் சாப்பிட்டால் வயிறு மந்தம், மூட்டுவலி, உடல் சூடு அதிகரிக்கும். இதற்கு மருந்தாகக் கொத்தமல்லி இலை ஒரு பிடி, இலவங்கைப்பட்டை ஒரு துண்டு சேர்த்துக் கஷாயம் செய்து சாப்பிடலாம்.

வாழைப்பழம் அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுபவர்களுக்கு வயிற்றுப் பொருமலும் சூட்டுடன் பேதியும் உண்டாகும். இதற்கு மாற்றாக ஒரு தேக்கரண்டி குல்கந்து சாப்பிடலாம்.

கோதுமை, நெய்யில் பலகாரம் செய்து சாப்பிடுபவர்களுக்கு உடல் சூடும் மலக்கட்டும் உண்டாகும். இதற்கு ஒரு பாதாம் பருப்பை மாற்றாகச் சாப்பிடலாம்.

சூட்டு உடம்பினருக்குக் கேழ்வரகுக் கஞ்சி, ரொட்டி போன்றவை ஒத்துக்கொள்ளாமல் உடல் வறட்சி, சிறுசிறு கொப்புளம் உண்டாகும். அப்படி உண்டாகாமல் இருக்க நெய் அல்லது வெண்ணெய் ஒரு தேக்கரண்டி சாப்பிடலாம்

சோளம் அதிகமாகப் பயன்படுத்துபவர்களுக்கு வயிறு இரைதல், பொருமல், மந்தம் உண்டாகும். இதனை மாற்ற அரைக் கோப்பைப் பால் அல்லது ஒரு தேக்கரண்டி நெய் சாப்பிடலாம்.

கறிப் பிரியாணி, புலவுச் சாதம் போன்றவை அதிகமாகச் சாப்பிட்டுத் தலை சுற்றல், மயக்கம் உண்டானால் எலுமிச்சம் பழச்சாற்றை வெந்நீரில் கலந்து சாப்பிடலாம்.

கோழி முட்டை அதிகம் தின்றால் முட்டை ஏப்பம், செரியாமை, பேதி உண்டாகும். அவை நேராதிருக்க முள்ளங்கியை வேக வைத்துத் தின்னலாம். அல்லது குல்கந்து ஒரு தேக்கரண்டி சாப்பிடலாம்.

JS. இளைஞர் படை சார்பாக ஈரோடு மாவட்டப் பகுதிகளில் வசிக்கும் நம் செங்குந்தர் குல மக்களுக்கு அரிசி, மளிகை பொருட்கள், காய்கறிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளர் உயர்திரு சோழா M.ஆசைத்தம்பி, வீரப்பன்சத்திரம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யுனிவர்சல் K.N.நந்தகோபால் அவர்கள் மற்றும் புளியம்பட்டி கிளைத் தலைவர் S.கொண்டப்பன் ஐயா அவர்கள் சத்தியமங்கலம் கிளை தலைவர் K.லோகநாதன் அவர்கள், வழக்கறிஞர் J.K @ ஜெகதீஸ் குமார், வீரப்பன்சத்திரம் கிளை துணை தலைவர் பாலாஜி, தமிழ் புலவர் பெருமான், சேலம் ப.பாலன் ஐயா அவர்கள், D. பிரதீப் செங்குந்தர் நகர் கிளை மற்றும் புளியம்பட்டி கிளை நிர்வாகிகள் R.நடராஜன், A. நடராஜன், K. அருணாச்சலம், S.நாகராஜன், K.கௌரிசங்கர் மற்றும் காந்திபுரம் கிளை நிர்வாகிகள் M.கோபாலகிருஷ்ணன், ம.செந்தில்நாதன், P. தங்கவேலு, V. மனோகரன், R.வேலுச்சாமி, R. ஈஸ்வரமூர்த்தி புளியம்பட்டி இளைஞர் அணியினர் மற்றும் இந்நிகழ்வில் கலந்துகொண்ட செங்குந்தர் பெருமக்கள் முன்னிலையில் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டது.

இப்பொழுது அனைத்து தனியார் பள்ளிகளிலும் பெற்றோர்களை கல்விக்கட்டணம் கட்டச்சொல்லி கட்டாயப்படுத்திக் கொண்டிருக்கின்ற வேளையில் நமது செங்குந்த சமுதாயத்தைச் சேர்ந்த இடுவாய் ஸ்ரீ காமாட்சி அம்மன் மெட்ரிகுலேசன் பள்ளி நிவாரணங்கள் வழங்கி பெற்றோரின் சிரமத்தில் பங்கு பெற்று வருகின்றது.

வருமானமின்றி உணவுக்கு கூட வழியின்றி பெற்றோர் இருக்கும் நிலையில் பள்ளியின் இந்த அறிவிப்பு பெற்றோருக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

நல்லதோ! கெட்டதோ! 'கொரோனா' நம்மை இரண்டு மாதங்களில் பல பாடங்களைக் கற்றுக் கொடுத்துள்ளது. சுத்தம், சுகாதாரம், உடல் நலத்துடன் நாட்டில் வாழ்வது எப்படி என்று நாம் கற்றுக் கொள்வோம். நல்ல செயல்களை செய்வது என்று உறுதி எடுத்துக் கொள்வோம். சூட்டோடு சூடாக என்று கிராமத்து வழக்கப்படி நமது அரசு 'பூரண மதுவிலக்கைக்' கொண்டு வருவதன் மூலம் இளைய தலைமுறை சிறந்தவர்களாக, நல்லவர்களாக வாழ்வதற்கு இது ஒரு அருமையான தருணம். அரசு செய்யவேண்டும் என்று நாம் ஒருமுகமாக வலியுறுத்துவோம்!

மீண்டும் சந்திப்போம்

பிரியமுடன்..

KPK செல்வராஜ்

செங்குந்தர்

எண்ணங்கள்.. ஆலோசனைகள்.. சொந்தக் கருத்து..

மார்ச் மித்திரன் இதழ் கிடைக்க பெற்றோம் மகிழ்ச்சி அஞ்சல்துறை வாயிலாக வரவில்லை என்றாலும் வாட்ஸ்அப் வழியாக நம் கரங்களை அடைய முயற்சி செய்து வெற்றி கண்டவிதம் ரியலி சூப்பர்.

தலைவர் மடலில் தகுதிக்கு தனி விளக்கம் அற்புதம். கொரோணாவால் நாம் கற்ற பாடம் வெகு சிறப்பு. வாழுகின்ற காலத்தில் நாம் என்ன செய்தோம் இன்னும் என்ன செய்ய வேண்டும் என்பதையே இன்றைய சூழலில் புரிய வைக்கிறது.

விஸ்வநாதர் ஆலய சிறப்பு அருமை. ஆரத்தி எடுப்பதன் நோக்கம் அதற்கான விளக்கம் வெகு சிறப்பு தொடரட்டும்.

சுயகட்டுபாடு நம்மவர்களின் குல கோட்பாடு. அதனை சூழலுக்கு ஏற்ப கோடிட்டுக் காட்டியவிதம் நம் தலைமைக்குரிய உன்னத பண்பாடு.

– அ.சுந்தரேஸ்வரன், தென்காசி.

அட்டையில் 2020-2023. தலைமை சங்க நிர்வாகிகள் படம் அழகு அருமை ஆனந்தம்.. அது.. மித்திரன் இதழுக்கு அழகு மணிமகுடம்.. உள்ளே. தேர்தல் நடைமுறைகள் நேரலை போல் உள்ளது.. மேலும், சுபாஷிணி I.A.S. அவர்களை வாழ்த்தியது செங்குந்தர் சமூகத்தில் ஒரு வைரம் என எடுத்துக் காட்டியது.... மிகவும் பெருமை..

– தி.க.வேல்முருகன், திட்டக்குடி.

மார்ச் 20 மித்திரன் இதழில் அருள்மிகு விஸ்வநாத சுவாமி ஆலயத்தின் தல வரலாறு, கோவில் அமைப்பு, ருத்ராட்ச கவசம், பைரவர், சனி பகவான், நவகிரகங்களின் சிறப்பு அமைப்பு, தலமரம், தீர்த்தம், நாகம் வந்து வழிபட்டது என பல அரிய செய்திகளை தெரிந்து கொள்ள வாய்ப்பளித்ததற்கு நன்றி! நேரில் சென்று பார்த்த நிலையில் உள்ளது. மற்றும் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவர் KPK உள்ளிட்ட அனைவருக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பணிகள் சிறப்படைய வாழ்த்துக்கள்.

– மு.சந்திரசேகரன்,
தஞ்சை மாவட்டப் பொருளாளர், தாராசுரம்.

முதல் புரட்சி தலைமை பொறுப்பை ஏற்றுக் கொண்டு புதிய முயற்சியாக வாட்ஸ்ஆப் வழியே செங்குந்தமித்திரன்!

வாழ்க செங்குந்தர்! வளர்க செங்குந்தம்!

– தேவி ப. சத்தியமூர்த்தி, திருப்பூர்.

20.4.2020 முதல் 22.4.2020 வரை 3 நாட்கள் தினமும் 50 நபர்களுக்கு அவிநாசி நகர் பகுதியில் இருக்கிற வசதியற்றோருக்கும், ஆதரவற்றோருக்கும் தக்காளி சாதம், புளி சாதம் போன்றவைகளை திருப்பூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் திரு. A.R.செல்வராஜ் அவர்கள் தனது சொந்த செலவில் வழங்கினார்.

உடுமலை செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் 26.04.2020 அன்று நமது சொந்தங்கள் 60 பேருக்கு நிவாரணத் தொகை பொருளாளர் குணசேகரன், தலைவர் கைலாசம், செயலர் ராமகிருஷ்ணன், துணைத் தலைவர் துரைசாமி, கலாவதி சிவசண்முகம், ராதா, வெங்குலட்சுமி மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தலைமையில் வழங்கப்பட்டது.

வேப்பம்பூ துவையல்

தேவையானவை:

வேப்பம்பூ	- 1 கப்
கடலை பருப்பு	- 2 தேக்கரண்டி
உளுத்தம் பருப்பு	- 2 தேக்கரண்டி
வெல்லம்	- சிறு துண்டு
வேர்க்கடலை	- 100 கிராம்
புளி	- 1 சிறு துண்டு
காய்ந்த மிளகாய்	- 3
எண்ணெய்	- 3 தேக்கரண்டி
உப்பு	- தேவைக்கேற்ப

செய்முறை: முதலில் ஒரு வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு, காய்ந்ததும் அதில் வேப்பம்பூக்களைக் கொட்டி, சிவக்கும் வரை வறுத்து, எடுத்துத் தனியாக ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

அதே வாணலியில் சிறிது எண்ணெய்விட்டு கடுகு, காய்ந்த மிளகாய், பெருங்காயத்தூள், உளுத்தம்பருப்பு, கடலை பருப்பு, வேர்க்கடலை ஆகிய வற்றை வறுத்துக் கொள்ளவும். இதனுடன் வறுத்த வேப்பம்பூ, புளி, உப்பு, சிறிய வெல்லம் ஆகியவற்றை சேர்த்து, சிறிது தண்ணீர் தெளித்து கெட்டியாக அரைக்கவும். சுவையான வேப்பம்பூ துவையல் தயார்.

சிற்றுண்டிகளுக்கும் சாதத்திற்கும் ஏற்றது இது. செரிமானத்தைத் தூண்டும், வாய்க் கசப்பைப் போக்கும், வயிற்றுப் பூச்சிகளை அழிக்கும்.

அதிமதுரம் தேங்காய் பால்

தேவையானவை:

அதிமதுரம்	- 5 துண்டுகள்
தேங்காய்ப் பால்	- 1 டம்ளர்
சுக்கு பொடி	- 1 டீஸ்பூன்
தூளாக்கிய வெல்லம்	- தேவைக்கு
ஏலக்காய் தூள்	- கால் டீஸ்பூன்

செய்முறை: அதிமதுரம் துண்டாகவும் பொடியாகவும் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். நாம் துண்டாகக் இருப்பதில் 5 துண்டுகளை எடுத்து தூளாக்கி நீரில் 5 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். ஊறிய அதிமதுரத்தை அரைத்து பிழிந்து ஒரு டம்ளர் அளவுக்கு சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு வாணலியில் அந்த சாறை ஊற்றி கொதிக்க விட வேண்டும். நன்கு கொதித்து வந்ததும் அதனுடன் தேங்காய் பாலை சேர்க்க வேண்டும். மீண்டும் கொதிக்கும்

போது சுக்கு பொடி, வெல்லம், ஏலக்காய் தூள் ஆகியவற்றை கொட்டி சில நிமிடங்கள் கழித்து இறக்கி, சூடு சிறிது ஆறியதும் பருகலாம். கொரோனா நோய்த் தொற்று சூழலில் சளி, இருமலை அகற்றவும், நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டவும் இதை நாள்தோறும் பருகலாம்.

செய்யாறு குறிஞ்சி குகன் மேட்ரிமோனி

(செய்யாறு வட்டச் செங்குந்தர் நலவாழ்வு சங்கத்தால் இயக்கப்படுகிறது)

(செங்குந்தர் திருமண தகவல் மையம்)

குறிஞ்சி குகன் நிலையம்

15/2, கோபால் தெரு, கிருபானந்தவாரியார் நகர்,
ரேணு மஹால் அருகில், செய்யாறு – 604 407. தி.மலை மாவட்டம்.
மேலும் தொடர்புக்கு: **04182 - 222784, 89739 32751, 94871 07254**

www.cheyyarkurinjikuganmatrimony.com

E-mail : senguntharsmanamaalai@gmail.com

அன்புள்ள சொந்தங்களே,

தங்கள் வீட்டில் திருமணத்திற்குக் காத்திருக்கும் வரனின் முழு ஜாதக விபரத்துடன் (Bio Data) + புகைப்படத்தை (Post Card Size) இணைத்து நேரில் (அல்லது) ஆன்லைனில் (Online) பதிவு செய்யுங்கள். பொருத்தமான வரன் உள்ளது. வரனின் திருமணம் முடியும் வரை பதிவு நீடிக்கும்.

திருமணம் நடந்து முடிந்த உடன் நீக்க தகவல் தெரிவிக்கவும்.

சேவைக் கட்டணம்: ரூ. 1000/- மட்டுமே!

CHEYYAR TALUK SENGUNTHAR WELFARE SOCIETY payable - CHEYYAR
என்ற பெயருக்கு DD (or) Postal Money Order (or) Indian Overseas Bank (IOB),
Cheyyar Branch, A/c No. 189101000007819 IFSC CODE: IOBA0001891
NEFT/IMPS Banking ஏதாவது ஒன்றிற்கு சேவை கட்டணம் அனுப்பலாம்.

வரன் பார்க்க வாங்க:
பகல் 10:00 - 1:00 மாலை 4:00 - 7:00 மணி வரை
விடுமுறை: பிரதி சனிக்கிழமை மற்றும் நமது பண்டிகை நாட்கள்.

செங்குந்தர் குல நாயன்மார்கள்

தண்டியடிகள் நாயனார்

திருவாரூர் என்ற சீர்மிகு திருத் தலத்தில் தோன்றியவர் தண்டியடிகள். இவரை, 'திருவாரூர் பிறக்கும் பெருமைத் தவமுடையார்' என்று சேக்கிழார் பெருமான் சிறப்பித்துக் கூறுகிறார்.

''நாட்டமிகு தண்டிக்கு அடியேன்'' என்று திருத்தொண்டர் தொகை (5) கூறுகின்றது.

இவர் பிறவியிலேயே கண் பார்வை யற்றவராக இருந்தார். அவர் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் எம்பிரான் மீது நிறைந்த பக்தியுடையவராக விளங்கினார். புறக்கண்கள் பார்வையில்லாவிட்டாலும் அகக்கண்களால் கூத்தப் பெருமானின் திருக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்தார்.

நாள்தோறும் அவர் திருக்கோயிலுக்குச் சென்று பெருமானை மனக்கண்ணால் தொழுது வணங்குவார். நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை தினமும் தவறாமல் ஓதுவார்.

இப்பணியைப் பலகாலம் செய்து வந்தார். இவ்வாறு இவர் பணி செய்து வரும் காலத்தில் திருவாரூரில் சமணர்கள் அதிக அளவில் இருந்தனர்.

சமணர்கள் திருக்கோயிலின் திருக் குளமான கமலாலயத்தின் மேற்குக்கரையில் பாழிகளை அமைத்தனர். அதனால் திருக்குளம் தூர்ந்து அளவில் சிறியதாகியது.

தண்டியடிகள் இதனை அறிந்தார். மிகுந்த மன வேதனை அடைந்தார். சமணர்களின் இச்செயலைத் தடுக்க முடியவில்லையே என்று வருந்தினார்.

குளத்தில் உள்ள குறைகளைச் சரிசெய்து முன்னர் இருந்தபடி பெரிதாக்க வேண்டும் என்று விரும்பினார். கண்பார்வை தெரியாத நிலையிலும் அதற்கான மன உறுதியும் உழைக்கும் திறனும் அவருக் குள் உத்வேகம் கொண்டது.

திருக்குளத்தில் தோண்டும் குழியின் ஓரத்தில் ஒரு கம்பு நட்டினார். அதில் கயிற்றைக் கட்டினார். குளத்தின் கரையின் மீது தாழ்ந்த உயரத்தில் இன்னொரு கம்பு நட்டினார். முன்பு கட்டிய கயிற்றின் மற்றொரு நுனியைக் கரையில் உள்ள கம்புடன் இழுத்துக் கட்டினார்.

"அருட்செல்வர்"
"ஆன்மீகச் செம்மல்"
வாரியார்தாசன்,
சங்கரன்கோவில்



கயிற்றைத் தொட்டுத்தடவிக் கொண்டு வழிதவறாது இறங்கினார்.

மண்ணைத் தோண்டிக் கூடையில் எடுத்துக் கொண்டு முன் போலவே கயிற்றைத் தடவிக் கொண்டு மேலேறி வந்தார். கூடையில் இருந்த மண்ணைக் கரையில் கொட்டினார்.

இவ்வாறு இடைவிடாத முயற்சியினால் மண்ணை எடுத்து வந்து மேலே கொட்டினார். இடைவிடாமல் திருவைந்து எழுத்தை ஓதியவாறே இப்பணியைத் தண்டியடிகள் செய்தார்.

இச்செய்தியைச் சேக்கிழார் பெருமான்,

குழிவாய் அதனிற் குறிநட்டுக்
கட்டும் கயிறு குளக்குலையின்
இழிவாய்ப் புறத்து நடுத்தறியோடு
இசையக் கட்டி இடை தடவி
வழியால் வந்து மண் கல்லி
எடுத்து மறித்தும் தடவிப்போய்
ஒழியா முயற்சியால் உய்த்தார்
ஓதும் எழுத்தஞ்சு உடனுய்ப்பார்

என்று திருத்தொண்டர் புராணத்தில் கூறுகின்றார்.

நல்ல இறைத் தொண்டரான தண்டியடிகள் உள்ளத்தில் கொண்ட விருப்பத்தால் செய்யும் இத்திருத் தொண்டில் மேம்பட்டு விளங்கினார். இதைக் கண்ட சமணர்கள் பொறுக்கமாட்டாதவர் ஆயினர். குளத்தைச் செம்மைப் படுத்தும் பணியைத் தடுக்க எண்ணினர்.

இதனால் சமணர்கள் அடிகளிடம் சென்று, 'நீர் இவ்வாறு குளத்தில் உள்ள மண்ணைத் தோண்டி அப்புறப் படுத்துவது சரியல்ல. நீர் செய்யும் இச்செயலால் மண்ணில் உள்ள உயிர்கள் பாதிக்கும். எனவே மண்ணைத் தோண்டி வீனாக அவ்வுயிர்களை வருத்த வேண்டாம்' என்றனர்.

இதனை,

நண்ணி நாளும் நற்றொண்டர்
நயந்த விருப்பால் மிகப்பெருகி
அண்ணல் தீர்த்தக் குளம் கல்லக்
கண்ட அமணர் பொறாராகி
எண்ணித் தண்டி யடிகள்பால்
எய்தி முன் நின்று இயம்புவார்
மண்ணைக் கல்லிற் பிராணிபடும்
வருத்த வேண்டாம் என்றுரைத்தார்

என்ற திருத்தொண்டர் புராணப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

சமணர்கள் சொன்னதைக் கேட்ட அடியார் அவர்களிடம் "நான் செய்வது நற்செயலே. பூசும் விபூதியையே சாந்தம் என்று அணிந்த சிவபிரானுக்கு உகந்த திருப்பணியைத்தான் செய்கின்றேன். இதனால் குற்றம் ஏதுமில்லை. இவை அறச்செயலேயாகும் என்ற உண்மை உமக்குத் தெரிய வருமோ?" என்று பதிலுரை கூறினார்.

இதனை 'பூசு நீறு சாந்தமெனப் புனைந்த பிரானுக்கான பணி ஆசிலா நல்லறமாவது அறிய வருமோ உமக்கு என்றார்' என்ற சேக்கிழார் பெருமான் வாக்கால் அறியலாம்.

எல்லையில்லாத அறிவுடையவ

ரான தண்டியடிகள் கூறியதைக் கேட்ட சமணர்கள் கோபம் கொண்டனர்.

நாங்கள் பலரும் நன்கு சிந்தித்து பின்னரே நீர் செய்வது குற்றமுடையது என்று கூறினோம். நாங்கள் கூறிய அறவுரையை நீர் காதில் கொள்ள வில்லை. நீர் கண்ணை இழந்தது மட்டுமன்றிச் செவியையும் இழந்து விட்டீரா? என்று ஏளனமாகக் கூறினர்.

இதைக் கேட்ட தண்டியடிகள் சமணர்களை நோக்கி "மந்தமான உணர்வும் கண்களின் பார்வையற்ற தன்மையும்கேளாத தன்மையுடைய காதுகளும் இந்த உலகில் உங்களுக்கே உள்ளன." என்றார்.

மேலும் தண்டியடிகள் சமணர் களிடம் "மேரு மலையை வில்லாக்கி முப்புரங்களையும் எரித்த சிவபெரு மானின் செம்மையான திருவடிகளை அல்லாமல் வேறு ஒன்றையும் நான் பார்க்க மாட்டேன். அத்தன்மையை நீவிர் அறிய மாட்டீர்" என்றார்.

அத்துடன் நில்லாது சிவபிரானின் எளிவந்த கருணையைச் சமணர்களுக் கும் உலகிற்கும் உணர்த்த விரும்பி னார். இறைவன் மீதுள்ள நம்பிக்கை அதிசயங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்தும் என்று திடமாக நம்பினார்.

அதனால் சமணர்களைப் பார்த்து, 'எம்பெருமான் திருவருளால் உலகம் எல்லாம் காணும் பொருட்டு எனக்குக் கண்பார்வை வந்து உங்கள் கண்கள் குருடாகி விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? என்று தாங்கமாட்டாத வேதனையுடையவராகக் கேட்டார்.

அடிகள் கூறியதைக் கேட்ட சமணர் கள், 'உம்தெய்வத்தின் அருளால் நீர் கண்ணைப் பெறுகின்ற அதிசயம் நிகழட்டும். அப்படி நடந்தால் அதன் பின்பு நாங்கள் இவ்வூரில் இருக்க மாட்டோம். இந்த ஊரைவிட்டே போய்விடுகின்றோம்' என்று ஆத்திரத்தோடு கூறினர்.

அத்துடன் தண்டிகளின் கூடையை யும் மண் வெட்டியையும் பிடுங்கித் தூரத்தில் எறிந்தனர். கயிற்றையும் நட்ட தறியையும் பறித்தனர்.

சமணர்களின் இக்கொடிய செயலால் சினம் கொண்ட தண்டியடி கள் மிகுந்த வருத்தமுற்றார். நஞ் சுண்ட கண்டம் உடைய பெருமானின் பூங்கோயிலுக்குச் சென்றார். "பெருமானே! நான் செய்த திருப்பணி யைத் தடுத்த சமணர்கள் என்னை அவமானப்படுத்திவிட்டனர். அதனால் என்மனம் பெரிதும் வருந்துகிறது.

நீர்இதனைக் கண்டு கொண்டி ருத்தல் தகுமோ, அடியேனுக்கு நல்ல தீர்வைத் தந்தருள வேண்டும்" என்று இறைவனின் சந்நிதியில் வீழ்ந்து கதறியழுதார்.

இதனைத் தெய்வச் சேக்கிழார் பெருமான், "ஐயனே இன்று சமணர் கள் தாம் என்னை அவமானம் செய்ய, நைவதானேன். இது தீர நல்கும் அடியேற்கு என வீழ்ந்தார்" என்று வருந்திக் கூறுகின்றார்.

பின்னர் தாம் தங்கியிருக்கும் திரு மடத்திற்குச் சென்றார். தம் திருப்பணி செய்ய இயலாத நிலை ஏற்பட்டதை எண்ணி மனம் வேதனையுற்று அழுத வாறே அன்றிரவு உறங்கலானார்.

அடியவரின் வேதனையைப் போக்கிடத் திருவுளம் கொண்டார் கூத்தப்பிரான். அன்றிரவு அவரது கனவில் தோன்றினார். 'அன்பனே! நீ உன் மனக்கவலையை ஒழிப்பாயாக உனக்கு கண்பார்வையளித்து சமணர் கள் பார்வை இழக்கச் செய்வோம்' என்று கூறியருளி மறைந்தார்.

அன்றிரவு பெருமானார் மன்னனின் கனவிலும் தோன்றினார். ‘தண்டி நமக்காகத் திருக்கோவிலில் குளம் திருப்பணி செய்கிறான். இதைப் பொறாத சமணர்கள் அவனது திருப்பணிக்கு இடையூறு செய்து தடுக்கும் செயலில் ஈடுபட்டுள்ளனர். அவனை அவமானத்துக்குள்ளாக்கி விட்டனர். அவனது திருப்பணி சிறப்பாக நிறைவேறவும். அவன் மனம் மகிழவும் தக்க வகையில் உதவுவாயாக என்று கூறியருள் செய்தார்.

மன்னன் விழித்தெழுந்தான். காலையில் அடிகள் இருக்கின்ற திரு மடம் தேடி வந்தான். கனவில் நிகழ்ந்த வற்றைக் கூறினான். இறைவனின் கட்டளையை நிறைவேற்றவே வந்துள்ளேன் என்றான். அடிகளும் தம் கனவில் இறைவன் வந்து திருவருள் புரிந்ததைக் கூறினார்.

மேலும், மன்னனிடம் சமணர் களால் பாழ்பட்டுக் கிடந்த திருக்குளத் தைச் சீர் செய்யத் திருப்பணி மேற்கொண்டதையும், சமணர்கள் அதைத் தடுத்து வேதனைக்கு உள்ளாக்கியதையும், சமணர்களிடம் செய்த சபதத்தையும் விரிவாக எடுத்துரைத்தார்.

இருவருக்கும் இடையே எழுந்த வழக்கை முடிக்க எண்ணிய மன்னன் சமணர்களை அங்கு வரவழைத்தான். வழக்கை முடிக்கவும் சபதத்தின்படி நிற்கவும் சம்மதித்தனர்.

பெருந்தொண்டரான தண்டியடி கள் முன் செல்ல மன்னனும் சமணர் களும் பின் சென்றனர். கமலாலயம் என்னும் குளத்தின் அருகில் சென்றனர்.

மன்னன் தண்டியடிகளைப் பார்த்து, பெருகும் தவத்தை உடைய வரே! நீவீர் செய்த சபதத்தின் படி திருவருளால் உமக்குக் கண்பார்வை வரச் செய்து காட்டும்‘ என்றான்.

அடிகள் அரசனின் ஆணையை ஏற்றார். பெருமானாரின் ஆலயத்திற் குச் சென்று பணிந்து வணங்கினார். கருணைக் கடலே! உன்னையே நினைத்து வழிபட்டு வரும் பக்தன் நான் உனக்குத் தொண்டு செய்வதே பிறவிப்பயன் என்றெண்ணிப் பணி செய்துவரும் அடியவன் நான்.

இது உண்மையாயின் இன்று இந்த மன்னன் எதிரில் நான் எனது கண்களின் பார்வையைப் பெறவும். தொண்டுக்குத் தடை செய்யும் சமணர்கள் கண் பார்வை இழக்கவும் அருள்புரிவீராக! என்று சூளுரைத்தார்.

திருவைந்தெழுத்தை ஓதி திருக் குளத்தில் மூழ்கினார். இறைவனின் அருளைத் தொழுது மேலே எழுந்தார். இறைவனின் திருவருள் கிட்டியது. அடிகள் தம் கண்களில் ஒளி பெற்றார். சமணர்கள் தம் கண்களின் பார்வை இழந்து தடுமாறினர்.

இறைவனின் பேரருட்திறத்தையும் அடியவரின் பக்தியின் மேன்மையை யும் கண்ட மன்னன் வியப்புற்றான். தீமை செய்த சமண சமயம் கெட்டது என்று கூறினான்.

தண்டியடிகளுடன் செய்த சபதத் தில் சமணர்கள் தோற்றுவிட்டனர். அதனால் முன்பு ஒப்புக்கொண்டபடி சமணர்கள் ஊரை விட்டுச் செல்லு மாறு கட்டளையிட்டான் மன்னன். அவ்வாறு செல்லாமல் எங்காவது நின்றால் அவர்கள் இனி எங்கும் காணாதபடி துரத்துமாறு வீரர்களுக்கு ஆணையிட்டான்.

கண் ஒளியை இழந்த சமணர்கள் மனம் கலங்கினர். செல்லும் வழி

தெரியாமல், தட்டுத் தடுமாறி ஊரை விட்டுச் சென்றனர்.

பின்னர் அரசன் சமணர்களின் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்தான். குளக்கரையை அகலப் படுத்தினான். அரசன் மனம் மகிழ்ந்து தண்டியடிகளை வணங்கினான்.

தண்டியடிகள் தாம் மேற்கொண்ட குளத்திருப்பணி இறையருளாலும் ஐந்தெழுத்தின் மகிமையாலும் நிறைவேறியதை எண்ணி மகிழ்ந்தார். மேலும் தொடர்ந்து திருத்தொண்டில் ஈடுபட்டார்.

பலகாலம் வாழ்ந்திருந்து இறைவன் திருவடி நிழலை அடைந்தார். பங்குனி மாதத்து சதய நட்சத்திர நன்னாளில் அவர் முக்திப்பேறு பெற்றார்.

●

அருப்புக்கோட்டை நகரம் பெரிய புளியம்பட்டி பகுதியில் செங்குந்தர் குல மக்கள் 250 ஏழை நெசவாளர் குடும்பங்கள் வசிக்கிறார்கள். அதில் முதியோர் பென்சன் - விதவை பென்சன் வாங்கும் பெண்களுக்கும் - ஊரடங்கு உத்தரவால் வேலை இழந்து உணவுக்குக் கஷ்டப்படும் ஏழை நெசவாளர்கள் - மில் ஊழியர்கள் மொத்தம் 116 பேருக்கு 22-04-2020 அன்று நபருக்கு 10 கிலோ அரிசி மற்றும காய்கறி செலவுக்கு ரூ.100ம் ஆக மொத்தம் ரூபாய் 62,000/-மதிப்பிலான நிவாரண உதவியை தெ.செ.ம.சங்க விருதுநகர் மாவட்ட செயற்குழு உறுப்பினர் அ.பழனிவேல் B.Sc., அவர்கள் தமது குடும்ப நிதியில் இருந்து வழங்கினார். இந்நிகழ்வில் அருப்புக்கோட்டை பெரிய புளியம்பட்டி பகுதி செங்குந்தர் மகாஜன சங்கக் கிளைத் தலைவர் ம.அய்யனார் Ex.MC அவர்கள் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பொருட்களை வழங்கினார். இத்திட்டம் நல்லமுறையில் செயல்பட இப்பகுதி செங்குந்தர் இளைஞர் அணியினரும் - பங்குனித் திருவிழா தீச்சாட்டி குழுவினர்களும் ஒத்துழைப்பு வழங்கினர்.

பாராட்டு விழா

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவராக திரு. K.P.K. செல்வராஜ் அவர்கள் தொடர்ந்து மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு திருப்பூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் 19.03.2020 வியாழக்கிழமை அன்று திருப்பூரில் பாராட்டு விழா நடைபெற்றது.

பாராட்டு விழாவிற்கு திருப்பூர் மாவட்ட செ.ம.சங்கத்தின் தலைவர் திரு. A.R.செல்வராஜ் அவர்கள் தலைமை தாங்கினார். மாவட்டப் பொதுச்செயலாளர் திரு. K.இராமகிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

திருப்பூர் மாவட்ட தலைமைச் சங்க செயற்குழு உறுப்பினர்கள் திரு. P.K.குருநாதன், திரு.P.முருகேசன், திரு. R.மணிகண்டன் உள்ளிட்ட திருப்பூர் மாவட்ட தாலுகா சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் தலைவருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர்.

மண்டலச் செயலாளர் திரு. M.உதயசங்கர் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார். மாவட்டத் தலைவர் திரு.A.R.செல்வராஜ் அவர்கள் தலைவர் திரு. K.P.K. செல்வராஜ் அவர்களுக்கும், மாவட்டப் பொதுச்செயலாளர் திரு. K.இராம கிருஷ்ணன் அவர்கள் மண்டலச் செயலாளர் திரு. M.உதயசங்கர் அவர்களுக்கும் ஆளுயர மாலை அணிவித்து சிறப்பித்தார்கள்.

நிறைவாக தலைவர் திரு. K.P.K.செல்வராஜ் அவர்கள் ஏற்புரை வழங்கினார்.

பெரியார் பல்கலைக்கழக தமிழ்த்துறை (B.A.M.A) பாடத்திட்ட வல்லுநர்க்குழு (4 மாவட்ட 106 கலைக்கல்லூரிகளுக்கு உட்பட்டது) உறுப்பினராக நியமிக்கபட்டதற்கு தாரை அ.குமரவேலு அவர்கள் துணைவேந்தர் மாண்பு அமை பொ.குழந்தைவேலு PhD. அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்குகிறார்.

தாரை குழுமம்

தாரை டிராவல்ஸ் & டூர்ஸ்

தினசரி: சென்னை, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி

சுற்றுலா மற்றும் ஆன்மீக யாத்திரைக்கு சொகுசு பேருந்துகள். இரயிலில் (Full Compartment) ஏற்பாடு செய்து தரப்படும்.

Domestic and International சுற்றுலாவுக்கு விமான டிக்கெட்கள் புக் செய்து தரப்படும்.

சென்னை
"தாரை இராஜ மாளிகை" # 1, லோகநாதன் நகர், 3 வது தெரு,
100 அடி சாலை, சூளைமேடு, சென்னை - 600094
போன் : **044 - 23612016** செல்: **95001 23403 - 04 -05 -06 -07 -08**

சேலம்
ஜூஹா ரெஸிடென்சி, சரவணா பேக்கரி,
புதிய பஸ் நிலையம், சேலம். போன்: **0427-2445055**
செல்: **95001 23401 - 02 - 09**

THARAI GROUPS

தாரை சிட்ஸ் (பி) லிமிடெட்

திருமுருக கிருபானந்த வாரியார்

காஞ்சி மகாப்பெரியவர்

THARAI CHITS (P) LTD,

தாரை 'திரு' மாளிகை 36, எல்.ஐ.சி காலனி, சேலம்-4. ✆ **0427-4042845, 4972846**

ரூ. 2,00,000 (இரண்டு லட்சம்) முதல் ரூ. 50,00,000 (ஐம்பது லட்சம் வரை) நடத்தப்படும்.

மேலாண்மை இயக்குனர் பாவலர் **Rtn. MPHF. P.P. தாரை அ. குமரவேலு,** M.A., M.Phil.,

சேலம் நிர்வாகி
தாரை கு. இராஜகணபதி, B.E., M.B.A.,

சென்னை நிர்வாகி
தாரை கு. திருஞானசம்பந்தம், B.E., M.B.A.,

இயக்குனர்
தாரை கு. தமிழ்ச்செல்வம், B.E., M.B.A.,

THARAI GROUPS

தாரை மெடிக்கல் ஏஜென்சி

Ph : 0427-4042847

(மொத்த மருந்து விற்பனை நிறுவனம்)

தாரைப்புள்ளிக்காரர் இல்லம், 11/1, பிருந்தாவன், 7வது குறுக்கு தெரு,
வசந்தம் ஹோட்டல் அருகில், ஃபேர்லேண்ட்ஸ், சேலம்-636 004.

அரியலூர் மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கத்தின் சார்பாக ஏழை நெசவாளர்கள் மற்றும விவசாயம் சார்ந்த தினக்கூலி தொழிளாளர்களுக்கும் கொரோனா ஊரடங்கை முன்னிட்டு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டன இதில் து.ப.புனிதம் மாவட்ட செயளாளர் S K. செல்வம் தலைமை செயற்குழு உறுப்பினர் மற்றும் பல்வேறு கிளைகளில் உள்ள நிர்வாகிகள் கலந்துகொண்டனர். இதில் பெரும்பாலான நிவாரண பொருட்களை கடலூர் மாவட்டத் தலைமை செயற்குழு உறுப்பினரும் தொழிலதிபருமான Lion.P.T. ராஜன் அவர்கள் வழங்கியுள்ளார்

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பேரூராட்சியில் நலிவடைந்த செங்குந்தர் சமுதாயத்தை சார்ந்த சுமார் 80 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ பொன்னி அரிசி மற்றும் 100 ரூபாய் குடும்ப செலவிற்காக மரக்காணம் செங்குந்தர் சங்கம் மூலம் மாநில மாவட்ட சங்க வேண்டுகோளை ஏற்று 25 - 04 - 2020 அன்று வழங்கப்பட்டது .

உலக மனிதர்களை முடக்கிய கண்ணுக்குத் தெரியாத கிருமி

கொரோனா வைரஸ்

நான் உயிர்தொழில் நுட்ப துறை (Biotechnology) ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளேன்.

இப்போது கும்பகோணம் அன்னை அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மருத்துவ குழுமத்தின் இயக்குநராக பணியாற்றி வருகிறேன்.

என்னிடம் என் மாணவர்கள் மற்றும் நண்பர்கள் ஏன் இன்னும் கொரானாவிற்கு மருந்து கண்டுபிடிக்க வில்லை? இந்த கொரோனா வைரஸ் கிருமி தொற்றிலிருந்து நம்மை எப்படி பாதுகாத்து கொள்வது? என விளக்கம் கேட்டனர்.

கொரோனா வைரஸ் கிருமி தொற்று பற்றி எனக்கு தெரிந்த அறிந்த உயிரியல் விளக்கத்தை கீழ்கண்டவாறு பதிவிடுகின்றேன்.

முழுமையான உயிர் பெறாத ஒரு அரைகுறை உயிரி தான் கொரோனா வைரஸ்.

உயிர்த்தொழில்நுட்பத் துறையில் முனைவர் பட்டம் பெற்ற மருத்துவர் Dr.P. மணி அவர்களின் வாட்ஸ்அப் பதிவிலிருந்து

ஒரு ஆர்என்ஏ

(நமது செல்களில் ஜீன் எனப்படும் டிஎன்ஏ இருப்பது மாதிரி வைரஸ்களில் இருப்பது டிஎன்ஏவின் அரைகுறை வடிவமான RNA)

அதைச் சுற்றி ஒரு புரதம் (Protein) மற்றும் கொழுப்பு சேர்ந்த ஒரு உறைதான் கொரோனா வைரஸ் (ஆல்கஹால் கொண்ட சானிடைசர் கள், சோப்பு நுரைபட்டால் இந்த உறை கரைந்து வைரஸ் அவுட்).

அந்த உறையின் மீது ஆங்காங்கே முட்கள். இது தான் கொரோனா வைரஸ். இந்த முட்களின் வேலை எளிதாக எதிலும் ஒட்டிக் கொள்வதே. இந்த முட்களும் புரதத்தால் ஆனவையே.

கொரோனா வைரசில் இந்த முட்கள் பார்ப்பதற்கு கிரீடத்தில் (Crown) இருக்கும் வேலைப்பாடு போல இருப்பதால் இந்த வைரசுக்கு கொரோனா வைரஸ் எனப் பெயர்.

இதை ஏன் அரைகுறை உயிரி என்கிறோம்?

இந்த வைரஸ்களால் தானாக வாழ முடியாது. இது ஒரு முழுமையான ஒட்டுண்ணி.

ஏதோ ஒரு உயிரினத்தின் செல்லுக்குள் புகுந்து அந்த செல்லில் இருக்கும் திட, திரவப் பொருட்களையே உணவாக்கிக் கொண்டு பல்கிப் பெருகுவது தான் வைரஸ்களின் வேலை.

செல்லுக்கு வெளியே சில மணி நேரமோ அல்லது சில நாட்களோ தான் இதனால் தாக்குப் பிடிக்க முடியும்.

எப்படித் தாக்குகிறது?

இந்த வைரஸ் மூக்கு, வாய் அல்லது கண் வழியாக உள்ளே நுழைந்தவுடன் முதலில் தொண்டை பகுதியை தாக்குகிறது.

தொண்டையில் உள்ள திசுக்களின் செல்களில் இது பல்கிப் பெருகியவுடன் தான் தொண்டை வலியும் இருமலும் தொடங்குகிறது.

இந்த வைரஸ்களை எதிர்த்து நம் உடலின் எதிர்ப்பு சக்தி (Immune system) உடனே மோதலை தொடங்குகிறது.

அந்த மோதலின் அறிகுறி தான் காய்ச்சல். பெரும்பாலான வைரஸ்கள் அதிக வெப்ப நிலையை தாங்க முடியாதவை என்பதால், உடலின் வெப்ப நிலையை உயர்த்தி

வைரஸ்களை காலி செய்ய நமது உடலின் எதிர்ப்பு சக்தி முயற்சிக்கிறது.

இந்த மோதலின்போதே பெரும்பாலான வைரஸ்களை நமது உடல் கொன்று விடுகிறது, கொரோனா வைரஸ் உள்பட.

நமது உடலின் Immune system ஒரு மாபெரும் பாதுகாப்பு அரண்.

வைரஸோ, பாக்டீரியாவோ அல்லது வேறு ஒரு நுண்ணுயிரோ உடலுக்குள் புகுந்தவுடன் அவற்றை நமது உடல் இரு வகையான காரணிகளை வைத்து அடையாளம் கண்டுபிடிக்கிறது.

முதலாவது அந்த நுண்ணுயிர் வெளியிடும் வேதியியல் பொருட்கள், இரண்டாவது அந்த நுண்ணுயிரின் உருவம்.

இது வெளியில் இருந்து வந்த பொருள் என்பதை கண்டுபிடித்த உடனே நமது ரத்தத்தின் வெள்ளை அணுக்கள் அவற்றை கொல்லும் வேலையில் இறங்குகின்றன.

வைரஸ், பாக்டீரியாவை அப்படியே விழுங்கி ஏப்பம் விடும் வேலைக்கு Macrophages, Neutrophils போன்ற அடியாட்களை வெள்ளை அணுக்கள் அனுப்புகின்றன.

ஆனால், இதையும் தாண்டி வைரஸோ பாக்டீரியாவோ உடலை பதம் பார்க்க ஆரம்பித்தால், அடுத்த கட்ட அரண்கள் வேலையில் இறங்கும்.

அதில் ஒன்று Innate lymphoid cells. இதன் ஒரு பிரிவான T- Killer cellகளின் வேலை வைரஸ்களால் பாதிக்கப்பட்ட உடல் செல்களை கொன்று, வெளியேற்றி உடல் திசுக்கள் மேலும் மோசமடையாமல் தடுப்பது.



மேலும் வைரஸ்களுக்கு உணவாகிக் கொண்டிருக்கும் செல்களின் எண்ணிக்கையை குறைப்பது. இது தான் இதன் வேலை.

அதே நேரத்தில் Macrophages, Neutrophils போன்றவற்றால் தடுக்க முடியாத வைரஸ்களை ஒழித்துக் கட்ட நமது உடல் அனுப்பும் பிரம்மாஸ்திரம் தான் B cells எனப்படும் வைரஸ்களை தாக்கும் செல்கள்.

இந்த செல்கள் வைரஸ்களின் உருவத்தை அடையாளம் கண்டு, அதன் மீது ஒட்டிக் கொண்டு, அப்படியே இழுத்துச் சென்று Lumph nodes எனப்படும் நிணநீர் சுரப்பிகளில் வைத்து, அங்கு சுரக்கும் ரசாயனங்கள் உதவியோடு வைரஸ்களை கொல்லும்.

இந்த உடல் எதிர்ப்பு சக்தி ஒரு பக்கம் இருக்க, தொண்டைப்பகுதியை அடைந்த கொரோனா வைரஸ்கள் அடுத்ததாக நமது உடலை பாதிப்பது நுரையீரலை.

நுரையீரலின் உள் சுவற்றில் இருப்பவை மிக லேசான பில்லியன் கணக்கான எபிதீலியல் செல்கள்.

இந்த செல்களில் கொரோனா வைரஸ் ஒட்டிக் கொண்டு, துளை போட்டு தனது ஆர்என்ஏவை உள்ளே நுழைக்கும்.

இந்த ஆர்என்ஏ செல்லுக்குள் போய் லட்சக்கணக்கில் தனது பிரதிகளை ஜெராக்ஸ் மெசின் மாதிரி காப்பி எடுக்கும்.

இந்த ஒவ்வொரு ஆர்என்ஏவும் ஒரு வைரசாக மாறும்.

அந்த செல் முழுக்கவே வைரஸ்களால் நிறையும்போது, அந்த செல்லே வெடித்து மடியும்.

அந்த வெடிப்பில் இருந்து கிளம்பும் லட்சக் கணக்கான வைரஸ்கள் அடுத்தடுத்த செல்களை இதே போல தாக்கி அழித்து, பல்கிப் பெருகும்.

10 நாட்களில் நுரையீரலின் பெரும்பாலான செல்களை இந்த வைரஸ் ஆக்கிரமிக்கும்.

இதுவரையும் கூட பிரச்சனை அதிகமில்லை. ஆனால், இந்த வைரஸ்களை அழிக்க நமது உடலின் Immune cells எனப்படும் எதிர் தாக்குதல் செல்கள் நுரையீரலில் நுழைந்து தாக்க ஆரம்பிக்கும்போது தான் பிரச்சனையே துவங்குகிறது.

மற்ற வைரஸ்களில் இருந்து

கொரோனா இங்கேதான் மாறுபடுகிறது.

இந்த கொரோனா வைரஸ், நமது உடலின் எதிர் தாக்குதல் செல்களுக்குள்ளேயே நுழைந்து அதையும் சேதப்படுகின்றன.

சேதப்படுத்துவதோடு மட்டுமல்ல, அந்த செல்களின் ஜீன்களில் குழப்பத்தையும் ஏற்படுத்துகின்றன.

நமது Immune System செல்கள் ஒன்றோடு ஒன்று தகவல் பரிமாறிக் கொள்வது சைட்டோகைன்ஸ் (Cytokines) எனப்படும் ஒரு வேதிப் பொருள் மூலம் தான்.

ஜீன்கள் பாதிக்கப்பட்ட எதிர் தாக்குதல் செல்கள் குழப்பமான சைட்டோகைன் தகவல்கள் அனுப்ப, நுரையீரலை பாதுகாக்க கிளம்பி வரும் Neutrophils செல்கள், கொரோனா வைரஸ்களுக்கு பதிலாக உடலின் எதிர்ப்பு சக்தி செல்களை தாக்க ஆரம்பிக்கும்.

அதே போல பாதிக்கப்பட்ட நுரையீரல் செல்களை தற்கொலை செய்ய வைத்து நோய் மேலும் பரவா மல் தடுக்க வேண்டிய வேலைக்காக வரும் T-Killer Cellகள் வந்த வேலையை விட்டு விட்டு, நன்றாக இருக்கும் நுரையீரல் செல்களை அழியச் சொல்லி தகவல் தரும்.

இதனால் நுரையீரல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி, அடுத்ததாக பாக்டீரியா தாக்குதல், நிமோனியா உள்ளிட்ட தோற்று நோய்களுக்கு ஆளாக நேரிடும். இந்த இடத்தில் தான் மரணங்கள் நிகழ்கின்றன.

இப்படி உடலின் எதிர்ப்பு சக்தியையே நமது உடலுக்கு எதிராக திருப்பி விடுவதில்தான் கொரோனா

வைரசின் முழு சக்தியும் அடங்கியுள்ளது.

வைரசின் உருவத்தை வைத்து அடையாளம் காணும் B- cellகள் கூட கொரோனாவிடம் இதுவரை எளிதில் வெற்றியை ஈட்டவில்லை.

இந்த வைரஸ்கள் அனுப்பும் வேதியியல் தகவல்கள் (Cytokines) எல்லா நேரமும் ஒரே மாதிரியாக இல்லை.

அவை லட்சக்கணக்கான வகைகளில் மாறிக் கொண்டே இருப்பதால் T-killer Cells, B cells ஆகியவற்றால் இவற்றை சரியாக அடையாளம் காண முடியவில்லை.

இதுதான் இந்த வைரசுக்கு எதிராக மருந்தோ தடுப்பு ஊசியோ தயாரிப்பதில் பெரும் சிக்கலை ஏற்படுத்தி வருகிறது.

நாம் உண்ணும் அல்லது ஊசி மூலம் போட்டுக் கொள்ளும் மருந்துகள் உடலுக்குள் சென்றவுடன் வேதியியல் தகவல்களாக மாறித்தான் நோயை ஏற்படுத்தும் கிருமிகளோடு நேரடியாக மோதுகின்றன, அல்லது உடலின் நோய் எதிர்ப்பு மண்டலம்

கைகளை சோப்பால் நன்கு கழுவவும்.

முகக்கவசம் அணியவும்.

வாய், மூக்கு, கண்களை கைகளால் தொடாதீர்.

(Immune System) உடன் பேசி, வேண்டிய எதிர்ப்பு மருந்தை உடலையே தயாரிக்க வைக்கின்றன.

ஆனால், கொரோனா நமது உடல் எதிர்ப்பு சக்தி சிஸ்டத்தையே தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சென்று விடுவது தான் இந்த வைரசுக்கு எதிராக எந்த மருந்தை வைத்து போராடுவது என்ற குழப்பத்தில் மருத்துவ உலகை ஆழ்த்தியுள்ளது.

கொரோனா வைரஸ்களின் கெமிக்கல் தாக்குதல்களால் குழம்பிப் போன T-killer Cells, B Cells-களும் ஏற்கனவே கொரோனா பாதித்த நுரையீரல்களை மேலும் பாதித்து உலகெங்கும் உயிரிழப்புகளை ஏற்படுத்தி வருகின்றன.

உடலில் கொரோனா வைரஸ் ஏற்படுத்தும் பெரும் குழப்பத்துக் கிடையிலும் பெரும்பாலான நேரங்களில் நமது உடல் எதிர்ப்பு சக்தி சிஸ்டம் கொரோனா வைரஸை தோற்கடித்துவிடுகிறது.

நீரிழிவு நோய் உள்ளவர்களின் ரத்தத்தில் அதிகமாக இருக்கும் சர்க்கரையால் உடலின் எதிர்ப்பு சக்தி முடக்குகிறது.

அதே போல இதயக் கோளாறு, பி.பி உள்ளவர்களின் உடலில் நுண்ணிய ரத்தக் குழாய்கள் போதிய ரத்தத்தை எடுத்துச் செல்வதில் சிக்கல் வருவதால், உடலின் எல்லா பகுதிக் கும் போதிய சக்தி கிடைப்பதில்லை, நோய் எதிர்ப்பு சக்தி உள்பட.

ஆனால், ஏற்கனவே நுரையீரல் பிரச்சனை, நோய் எதிர்ப்பு சக்தியில் பிரச்சனை உள்ள வர்களில்தான் இந்த உயிரிழப்புகள் அதிக மாக ஏற்படுகிறது.

நல்ல உடல் நிலையில் உள்ள வர்களுக்கு பிரச்சனை குறை வாகவே உள்ளது.

ஆனால், சர்க்கரை அளவும் பிபியும் மருந்துகள், உடற் பயிற்சி மூலம் கட்டுப் பாட்டில் உள்ளவர் களுக்கு பிரச்சனை இல்லை.

இங்கேயும் உடலின் எதிர்ப்பு சக்தி கொரோ னாவை தோற் கடித்து விடுகிறது என்பதுதான் நல்ல செய்தி.

வீட்டிலேயே இருங்கள்.
தேவையின்றி சுற்றாதீர்கள்.

சளி, இருமல் இருந்தால்
தனிமையிலிருங்கள்.

இருமல், தும்மலின்போது
முழங்கையால் மறைக்கவும்.

கொரோனா வைரசுக்கு தடுப்பூசி கண்டுபிடித்துவிடுவார்களா? என்பது தெரியவில்லை.

35 ஆண்டுகளுக்கு முன் வந்த எய்ட்ஸ் நோய்க்கு இன்னும் தடுப்பூசி கண்டுபிடிக்கப்படவில்லை.

அந்த எச்ஜவி வைரசும் கொரோனா வைரஸ் ரகத்தை சேர்ந்தது தான்.

அதுவும் நமது உடலின் எதிர்ப்பு சக்தியை கதிகலங்க வைக்கும் வைரஸ் தான்.

ஆனால், கொரோனா மாதிரி எச்ஜவி வைரஸ் மூலம் இவ்வளவு சாதாரணமாக இருமல், தும்மல் மூலம் எல்லாம் பரவவில்லை.

அந்த வகையில் கொரோனாதான் கொடூரம். அதற்குத் தான் வீட்டிலேயே முடங்க சொல் கிறார்கள்.

இன்னும் மருந்து கண்டுபிடிக்க இயலாத நிலையில், இந்த நோயில் இருந்து தப்பிப்பதே உசிதம்.

இந்த நோய் தாக்குதலை தவிர்ப்பதே இதற்கான இப்போதையே ஒரே மருந்து!

தனித்திருப்போம்! விழிப்புடன் இருப்போம்!! வீட்டிலேயே இருப்போம்!!! கொரோனாவை ஒழிப்போம்!!!!

கைகளை சுத்தமாகக் கழுவும் முறை

தஞ்சை மாவட்ட செங்குந்தர் கல்விச்சங்கம்

2020 – 2022 புதிய பொறுப்பாளர்கள் பதவி ஏற்பு விழா

2020 - 2022 தேர்தலில் வெற்றி பெற்ற புதிய பொறுப்பாளர்களுக்கு பதவிஏற்பு விழாவும், பாராட்டு விழாவும் மாவட்டத்தலைவர் லயன் திரு.S.சிவா அவர்கள் தலைமையில் 07.03.2020 சனிக்கிழமை காலை 11 மணியளவில் தஞ்சாவூர் திருவோண மஹாலில் நடைபெற்றது.

பதவி ஏற்பு விழா தேர்தல் ஆணையர்கள் திரு.V.சிவகுமார் மற்றும் திரு.M.சுப்ரமணியன் ஆகி யோர் முன்னிலையில் நடைபெற்றது. தஞ்சை செயலாளர் திரு. சிவ.அமிர்தலிங்கம் அவர்கள் இறைவணக்கம் பாடினார். கோவிந்தபுரம் தலைவர் திரு.P.பாலசுப்ரமணியன் M.A., அவர்கள் செங்குந்தர் உறுதிமொழியை வாசித்தார்.

பொதுச்செயலாளர் நல்லாசிரியர் திரு.சோ.காசிநாதன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மாவட்டத் தலைவர் லயன் திரு.S.சிவா அவர்கள் அனைவருக்கும் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

திருமதி.நீலாவதி ராஜேந்திரன், திரு.N.கார்த்திகேயன், திரு.சுவாமி இராமலிங்கம், திரு.J.மணிமாறன், திருமதி.சொர்ணாம்பாள் அருணாச் சலம், திரு.K.S.V.சிங்கார வேலு, பேராசிரியர் திரு.A.இராமகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். பின்னர் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் பின்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

2020 ஆம் ஆண்டு தேர்தலில் கிளைகளிலும், மாவட்டத்திலும் பொறுப்பாளர்களை ஒருமனதாக தேர்வு செய்த நம் செங்குந்தர் குல சொந்தங்கள் அனைவருக்கும் ஒருமனதாய் நன்றியை தெரிவித்துக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

கிளைகளின் சார்பில், எல்லா கிளைகளிலும் செங்குந்தர் மக்கள்தொகை கணக்கெடுப்பது என தீர்மானிக்கப்பட்டது. எல்லா கிளைகளிலும் மாவட்ட, மாநில, செங்குந்தமித்திரன் ஆயுள் உறுப்பினர்களை சேர்ப்பது என தீர்மானிக்கப்பட்டது.

01.01.2020 அன்று இயற்கை எய்திய சன்னாபுரம் S.T.சுந்தரேச முதலியார், 13.01.2020 அன்று இயற்கை எய்திய கபிஸ்தலம் N.வளர்மதி, 22.01.2020 அன்று இயற்கை எய்திய சுந்தரப்பெருமாள் கோவில் A.செல்வராஜ், 27.01.2020 அன்று இயற்கை எய்திய உள்ளிக்கடை K.ஜெயலெட்சுமி, 29.01.2020 அன்று இயற்கை எய்திய பாபநாசம் V.தையல்நாயகி, 04.02.2020 அன்று இயற்கை எய்திய சாக்கோட்டை G.சுகுமார், 07.02.2020 அன்று இயற்கை எய்திய சுந்தரப் பெருமாள் கோவில் T.S.அப்பாதுரை, 27.02.2020 அன்று இயற்கை எய்திய கபிஸ்தலம் ஆசிரியர் V.விஸ்வநாதன், 07.03.2020 அன்று இயற்கை எய்திய தமிழக முன்னாள் அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பொருளாளர் திரு.M.சந்திரசேகரன் அவர்கள் ஏற்புரை ஆற்றினார். துணைப்பொதுச்செயலாளர் திரு.S.சோலைமுத்து அவர்கள் நன்றி கூறினார். பின்னர் அனைவருக்கும் பொன்னாடைகள் அணிவிக்கப் பட்டது. அனைவருக்கும் மதிய விருந்து அளிக்கப்பட்டது.

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்..

தமிழக அரசு அறிவுறுத்தலின்படி கபசுரக் குடிநீர் வழங்க தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் மற்றும் சங்கரன்கோவில் செங்குந்தர் முன்னேற்ற சங்கம் சார்பாக ஏற்பாடு செய்து சங்கரன்கோவில் கோட்டாட்சியர் M.முருகசெல்வி M.A., அவர்கள் முதல் நாள் துவங்கி வைத்தார்கள்.

இவர்களுடன் செங்குந்தர் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் P. மாரிமுத்து B.Sc., அவர்கள் முன்னிலை வகித்தார்கள். சங்கரன்கோவில், சுப்புலாபுரம், சம்சிகாபுரம், அத்திப்பட்டி, அய்வாய்புலிப்பட்டி மற்றும் குருவிகுளம் வசிக்கும் நமது செங்குந்த சமுதாய மக்கள் சுமார் 30,000 நபர்களுக்கு கபசுரக் குடிநீர் வழங்கி கொரோனா தொற்று நோயில் இருந்து பாதுகாத்துக் கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அனைத்து பகுதிகளிலும் சங்கரன்கோவில் செங்குந்தர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் களப்பணி ஆற்றினார்கள்.

மே 20

தி.ஹர்த்திக் சிவா

பெற்றோர்:
திருநாவுக்கரசு - நீலா
அச்சிறுபாக்கம்

தெய்வத்திரு. **கே.எம்.கோவிந்தராசனார்** அவர்கள்

நிறுவனர் : கே.எம்.ஜி. கல்வி நிறுவனங்கள்
குடியேற்றம் நகராட்சி முன்னாள் சேர்மன் (1964-1969)
1993-ஆம் ஆண்டு குடியேற்றம் நகரில் 2 நாட்கள் நடைபெற்ற
அகில உலக செங்குந்தர் மகாஜன சங்கத்தின்
மாபெரும் மாநாட்டின் வரவேற்புக்குழு தலைவர்

திருவள்ளுவர் தொடக்கப்பள்ளி
திருவள்ளுவர் மேனிலைப் பள்ளி
கே.எம்.ஜி. கல்வியியல் கல்லூரி
கே.எம்.ஜி. கலை & அறிவியல் கல்லூரி

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் நிரந்தர இணைவு பெற்றது.
பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது.
தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் (NAAC) B+ தர மதிப்பீடு பெற்றது.

இளநிலை (UG)

- **B.A** - ஆங்கிலம்
- **B.B.A** - வணிக ஆள்முறையியல்
- **B.Com(General)** - வணிகவியல்
- **B.Com(CA)** - கணினி பயன்பாட்டு வணிகவியல்
- **B.C.A** - கணினி பயன்பாட்டியல்
- **B.Sc** - கணினி அறிவியல்
- **B.Sc** - உயிர்வேதியியல்
- **B.Sc** - நுண்ணுயிரியல்
- **B.Sc** - வேதியியல்
- **B.Sc** - கணிதம்

முதுநிலை (PG)

- **M.A** - ஆங்கிலம்
- **M.Com(General)** - வணிகவியல்
- **M.Com(CA)** - கணினி பயன்பாட்டு வணிகவியல்
- **M.Sc** - உயிர்வேதியியல்
- **M.Sc** - தகவல் தொழில்நுட்பவியல்
- **M.Sc** - கணிதம்
- **M.Sc** - வேதியியல்
- **M.Sc** - பயன்பாட்டு நுண்ணுயிரியல்
- **M.B.A** -

ஆய்வியல் நிறைஞர் (M.Phil)

- **M.Phil** - வணிகவியல்
- **M.Phil** - உயிர்வேதியியல்
- **M.Phil** - கணினி அறிவியல்
- **M.Phil** - கணிதம்
- **M.Phil** - வேதியியல்

முனைவர் பட்டப்படிப்பு (Ph.D)

- **Ph.D** - வணிகவியல்
- **Ph.D** - உயிர்வேதியியல்
- **Ph.D** - நுண்ணுயிரியல்
- **Ph.D** - வேதியியல்

கே.எம்.ஜி கல்வி நிறுவனங்களின் நிர்வாகக் குழு

K.M.G.பாலசுப்பிரமணியன்

K.M.G.சுந்தரவதனம் B.A.,B.G.L.,

K.M.G.இராஜேந்திரன் B.Sc.,M.L.,
வழக்கறிஞர்

K.M.G.முத்துக்குமார் B.Com.,

கொரோனா நிவாரண உதவிப் பணியில் செங்குந்தர்கள்

திருப்பத்தூர் மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கம் மற்றும் திருப்பத்தூர் நகர செங்குந்த மகாஜன சங்கம், ஸ்ரீ கற்பக விநாயகர் செங்குந்தர் சங்கம் காந்தி பேட்டை இணைந்து 29-4-2020 அன்று 750 குடும்பங்களுக்கு 1,50,000/- ரூபாய் மதிப்புள்ள காய்கறி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வேலூர் மாவட்ட வாரியார் கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளை, KMG கல்வி நிறுவனங்கள் நிறுவனர் K.M.G.ராஜேந்திரன், தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்க துணைத் தலைவர் C.N. தட்சணாமூர்த்தி, மாவட்ட தலைவர் K.சம்பத்குமார், மாவட்ட செயலாளர் N.மாணிக்கவாசகம் ExMc, மாவட்ட பொருளாளர் K.ஜெயபிரகாஷ், மாநில செயற்குழு உறுப்பினர் S. ரவிச்சந்திரன், மாவட்ட மருத்துவ அணி தலைவர் Dr. A. மோகன், மாவட்ட நெசவாளர் அணித் தலைவர் K. சித்தார்த்தன், ஸ்ரீ விநாயகா செங்குந்தர் சங்க தலைவர் S.ரங்கநாதன், ஊர் எஜமானர் P.ஈஸ்வரன், திருப்பத்தூர் நகர செங்குந்தர் மகாஜன சங்க தலைவர் S.கிருஷ்ணமூர்த்தி, திருப்பத்தூர் நகர பொருளாளர் S.முருகன் மற்றும் திருப்பத்தூர் மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்க நிர்வாகிகள், நகர நிர்வாகிகள் மற்றும் காந்தி பேட்டை பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

ஊத்தங்கரை நகர் செங்குந்தர் சமுதாயம் சார்பாக ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வளாகத்தில் நல திட்டம் மற்றும் முகக்கவசம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நகர தலைவர் S.தியாகராஜன் தலைமை வகித்தார். நலத்திட்டப் பொருட்களை மாவட்டத் தலைவர் T.S.திருநாதன் அவர்கள் மற்றும் வட்டாட்சியர் செந்தில்குமார் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இந்த நிகழ்ச்சியில் தர்மகர்த்தா திரு இர.பாபுசிவக்குமார் மற்றும் துணை தலைவர் T.N.தண்டபாணி செயலாளர் S.ஜெயராமன் பொருளாளர் P.பன்னீர் மற்றும் சமுதாய பொருளாதார தொண்டு மன்ற தலைவர் T.M.முத்துசாமி செயற்குழு உறுப்பினர்கள் T.ஜெயக்குமார், M.வையாபுரி, R.M.ஆறுமுகம், D.M.S. முருகன், D.லோகநாதன் மற்றும் தொண்டு மன்ற செயலாளர் S.தனக்கோடி, C.மாதவன், C.தயாளன், C.வாசு, ஆசிரியர் P.மோகன், N.தாமோதிரன், N.குமரேசன் மற்றும் செங்குந்தர் சமுதாய சொந்த பந்தங்கள் கலந்து கொண்டு சமூக இடைவெளிவிட்டு இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

C.N.பாளையம் செங்குந்தர் இளைஞர் அணியினர் கிருமி நாசினியை தங்கள் பகுதி முழுவதும் தெளித்தனர்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

தலைமைச் சங்க நிர்வாகிகள் (2020 – 2023)

தலைவர்

திரு. **K.P.K.செல்வராஜ்,**
20, பெத்தி செட்டிபுரம் கிழக்கு
2வது வீதி, திருப்பூர் – 641601.
செல்: **98430 43590**

பொதுச்செயலாளர்

திரு. **R.P.குமரகுருபரன்**
61, சந்தானம் தெரு,
V.G.P. புஷ்பா நகர், மேடவாக்கம்,
சென்னை – 600100.
செல்: **91766 90404**

பொருளாளர்

திரு. **R.காந்தி**
10, பழைய அக்ரஹாரம் தெரு,
சின்ன சொக்கிகுளம்,
மதுரை – 625 002.
செல்: **99932 75599**

துணைப் பொதுச்செயலாளர்

திரு. **K.சுந்தரமூர்த்தி**
2/53, மெயின் ரோடு,
இளவங்கார்குடி, பௌத்திரமாணிக்கம்,
திருவாரூர் – 610 001.
செல்: **98406 11567**

துணைத் தலைவர்கள்

திரு. **C.N.தட்சணாமூர்த்தி**
144/44F, நரிமுருகப்ப முதலி தெரு,
பிச்சனூர், குடியாத்தம் – 632 602.
கைபேசி: **94439 64556**

திரு. **மெட்டல் M.மணி**
76, VCV லே அவுட், R.S.புரம்,
கோயம்புத்தூர் – 641 002.
செல்: **94437 16040**

திரு. **A.பாலதண்டபாணி**
1/311–1, செங்குந்தர் நகர்,
செங்குந்தர் பொறியியல் கல்லூரி,
மண்டகப்பாளையம் – 637 205.
திருச்செங்கோடு.
கைபேசி: **98427 53349**

திரு. **C.கார்த்திகேயன்**
219/18, Kavyam
Hari Shankar Road,
Tharekkad, Palakkad - 678 001
Kerala State
செல்: **070341 40659**

திரு. **P.G.செல்வராஜ்**
5-4-144, S.V. Koil Street
Ekambarakuppam-517 592
Nagari Mandal,
Chittoor Dist (A.P)
செல்: **94402 70600**

செயலாளர்கள்

திரு. **சீனி. கார்த்திகேயன்**
42/73, இராஜராஜன் தெரு,
திருவண்ணாமலை – 606 601.
கைபேசி: **97512 99999**

திரு. **க.பாலசுப்ரமணியம்**
12/33A, ரெகுநாதபுரம் கிழக்கு,
தேவக்கோட்டை – 630 302.
சிவகங்கை மாவட்டம்.
செல்: **97887 86878**

திரு. **M.உதயசங்கர்**
551/3, சங்கமம் வீதி,
காமராஜ் நகர்,
பவானி – 638 301.
செல்: **98426 92234**

திரு. **R.கந்தசாமி**
No. 231, 1st Main, 3rd Croos,
KSTRC Layout,
J P Nagar 2nd Phase,
Bangalore - 560 078.
செல்: **098450 29016**

திரு. **ப.இராஜாக்கண்ணு**
2, தமிழ் இல்லம், பாரதி வீதி,
சாந்தி நகர், இலாசுப்பேட்டை
புதுச்சேரி – 605 008.
செல்: **94422 33381**

வருந்துகிறோம்

கடலூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் புரவலரும்,
சிதம்பரம் செங்குந்த மகாஜன சங்கத்தின் வழிகாட்டியும்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் முன்னோடியுமான பெரியவர்,
வாணி பார்மசி உரிமையாளர்
திரு. **கு.பழனிவேல் செங்குந்தர்** அவர்கள்
14.04.2020 அன்று காலமானார்.

தருமபுரி மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின்
முன்னாள் மாவட்ட பொருளாளர்
திரு. **V.M.கோபால் செங்குந்தர்** அவர்கள்
27.04.2020 அன்று காலமானார்.

பழனி நகர செங்குந்தர் நலப்பேரவையின் தலைவர்
திரு. **து.செ.வெங்கட்டரமணன் செங்குந்தர்** அவர்கள் மனைவியார்
திரு. **V.வீணா (எ) நாச்சிமுத்தம்மாள்** அவர்கள்
23.04.2020 அன்று காலமானார்.

மதுரை தெய்வத்திரு. **மா.கன்னையா செங்குந்தர்** அவர்கள்
துணைவியாரும், திரு. **மா.கன்னையா முருகேசன்** அவர்களின்
தாயாருமான திருமதி. **க.முத்தம்மாள்** அவர்கள்
24.04.2020 அன்று காலமானார்.

திருவண்ணாமலை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் பொருளாளர்
திரு. **P.T.சம்பந்தம் செங்குந்தர்** அவர்கள் துணைவியார்
திருமதி. **S.அனுசுயாதேவி அம்மாள்** அவர்கள்
24.04.2020 அன்று காலமானார்.

இவர்களது மறைவுக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்
சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Printed by T.Parvathi, Published by K.P.K.Selvaraj
on behalf of South Indian Senguntha Mahajana Sangam
Printed at: Arul Vinayaga Fine Arts, 5/158, Samipuram Colony, Sivakasi - 626 189.
Published from 58, Armenian Street, Chennai - 600 001. Editor: **K.P.K.Selvaraj**

SENGUNTHAR ENGINEERING COLLEGE
(AUTONOMOUS)

Estd. 2001

BSCIC JAS-ANZ ISO 9001 REGISTERED

Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai
Accredited by NAAC with "A" Grade & Recognized Under Section 2(f) and 12(B) of UGC Act, 1956
TIRUCHENGODE (Po.), NAMAKKAL - 637 205,
TAMIL NADU, INDIA.

B.E.
CIVIL | CSE*
ECE* | EEE*
MECH*
*Permanently Affiliated

MBA

Ph.D
CSE | ECE

TNEA 2617

M.E.
Structural Engg.
CSE |
VLSI DESIGN

SENGUNTHAR COLLEGE OF ENGINEERING

Estd. 2007

GABCB

(Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai)
An ISO 2001 : 2015 Certified Institution
TIRUCHENGODE - 637 205, NAMAKKAL (Dt)

B.E.
MEDICAL ELECTRONICS ENGG.*
*Permanently Affiliated
ROBOTICS & AUTOMATION

B.Tech.
INFORMATION TECHNOLOGY

TNEA 2629

M.E.
COMM & NETWORKING
MEDICAL ELECTRONICS

SENGHUNDHAR COLLEGE OF PHARMACY

SENGHUNDHAR COLLEGE OF PHARMACY
Estd. 2017

GABCB

Approved by AICTE, New Delhi & Pharmacy Council of India (PCI)
Affiliated to The Tamil Nadu Dr.M.G.R. Medical University, Chennai
TIRUCHENGODE - 637 205, NAMAKKAL (Dt)

D.PHARM. | B.PHARM.
Lateral Entry

For Admission Contact

Phone : 04288 - 254716, 255716, 253716, 255727
Cell : 93674 74849, 93600 53352
Log on : www.scteng.co.in | www.scew.org | www.scpt.co.in

REGISTERED_REGISTRATION NO. **TN/CNI-GPO/222/2018-2020** TO POST WPP No.**TN/PMG(CCR)/WPP109/2018-2020**
Registrar of Newspapers for India No. **TNTAM/2000/03982** Date of Publication 25th day of Every Month.
Due Date of Posting 25th - 30th of Every Month. Posted at Egmore R.M.S. Patrika Channel, Chennai - 600008.